
PENMANI November-2010 Regd. No. TN/CH(C)/326/09-11. Licensed to Post WPP No.49/09-11
Regd. with the Registrar of newspaper for India under No.24258/71. Published 1st of every month.



# அந்திமழைப் பொழிகிறது!

- ஆர். மணிமாலா



"இந்தா நாயகியே கனகவல்லி
காளி மகமாயி... கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா..."

எங்கிருந்தோ மிதந்து, தவழ்ந்து, குழைந்து பைரவியின் காதில் விழுந்தது எல்.ஆர். ஈஸ்வரியின் குரல்.

அருமையான குரல் வளம். ஆனால் அதை ரசிக்கும் நிலையில் பைரவி இல்லை. காரணம்... ஆழ்ந்த உறக்கம்.

பக்கத்துத் தெருவிலிருந்த பாளையத்தம்மன் கோவிலில், ஆடி வெள்ளி என்பதால்... ஐந்து மணிக்கே ஸ்பீக்கரில் பாட்டு அலறும்.

கடலில் காகிதம் போல் மிதந்தபடி நீச்சல் அடித்துக் கொண்டிருப்பது போல் கண்ட கனவு, பாட்டால் அமுங்கிப் போன எரிச்சலோடு புரண்டுப் படுத்தாள்.

ஜன்னல் வழியே உட்புகுந்த தென்றல் ஆச்சர்யத்தோடு அவள் மேல் மோதியது.

அத்தனை மிருதுவான அழகி அவள்!

சற்றே நீண்ட நாசியும், குவிந்த உதடுகளும், செல்லம் கொஞ்சும் மோவாயும், இருபத்தி மூன்று வயதான பின்பும் குழந்தைத்தனத்தை விட்டு வைத்திருந்தது.

கடத்தில் கைப்பம்பை அடிக்கும் சப்தம் காதைக் கிழிக்க... கண்களை திறக்காமலே 'ச்சை' என அலுத்துக் கொண்டு பெட்ஷீட்டை தலை வரை இழுத்து போர்த்திக் கொள்ள... தென்றல் ஏமாற்றத்துடன் விலகி நின்றது.

ooo

எவ்வளவு நேரம் தூங்கினாளோ!

செல்லென்ற [illegible]

வெக்கை காலையிலேயே உறைத்தது.

பைரவியின் நெற்றியில் குண்டூசி முனைகளாய் வியர்வைப் பொட்டுக்கள் பூத்திருந்தன.

மசாலா மணம்!

என்ன மசாலா?

பைரவியின் நாசி பட்டிமன்றம் கலைக்காய் அல்லாட... எண்ணெய் பூரி பொங்கும் வாசம்.

'ஹய்யோடா... பூரி மசாலாவா?'

குதூகலத்துடன் போர்வையை உதறி எழுந்தமர்ந்தவளின் கண்களில் உற்சாகம்!

அவளுக்கு உலகத்திலேயே மிகமிகப்

பிடித்தது எது என்று கேட்டால்... உறவுகளை கூட ஒதுக்கி விட்டு, பூரி மசாலா என்றுதான் சொல்லுவான்.

அதற்காக, அவளுக்குப் பிடித்த தாஜ்மகாலைக் கூட எழுதி வைத்து விடுவாள்.

அதுவும் பூரி என்றால்... அமுங்காமல், உப்பிப் போய்... கையால் சுழற்றி விட்டால் சுற்றணும். ஆள்காட்டி விரலால் குத்தி, ஆவியை வெளியேற்றி, சுடச் சுட உருளை மசாலாவை தொட்டு சாப்பிடுவதென்றால்... ஆஹா... ஆஹா...!

பைரவியால் அதற்கு மேல் தாங்க முடியாமல் போர்வையை வீசி எறிந்து எழுந்து நின்றாள்.

ஜன்னலில் மாட்டியிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் முகம் பார்த்தாள்.

அப்போதுதான் கவனித்தாள்!

தோள்பட்டையில் சுடிதார் டாப்ஸ் கிழிந்திருந்தது.

நிஜம் உறைத்தது.

இரவு ஏற்பட்ட களேபரத்தில் அந்த தடியன் அவளை விரட்டியதில்... கிழிந்திருக்க வேண்டும்.

வீடு திரும்பும் போது பன்னிரெண்டுக்கு மேலாகி விட்டிருந்தது. அசதியில் உடையைக் கூட மாற்ற மனமின்றி படுத்து விட்டாள்.

பூரியாவது, மசாலாவாவது?

சட்டென உடையை கழற்றி நைட்டிக்கு மாறினாள்.

தோளில் டவல் எடுத்துப் போட்டுக் கொண்டு, பேஸ்ட் பிரஸ்ஸுடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

ஹாலில் அந்தக் குடும்பத்து மனிதர்கள் நிறைந்திருந்தனர்.

பழங்காலத்து வீடு!

பெரியக் கூடம். இடதுப்பக்கம் பாத்ரூம், டாய்லட், துணி துவைக்க கல், கைப்பம்பு எனவும், வலதுபக்கம் கிச்சன், அதையொட்டி டைனிங் ஹால், பக்கத்திலேயே பூஜையறை, அடுத்தடுத்து நாலு அறைகள் என ஹாலை நடுநாயகமாய் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. பைரவியின் அறை இடதுப்பக்கமாய் இருந்தது.

மெயின் வாசலிலிருந்து உள்ளே நுழைந்தால்... சிறு வராந்தா. அதையொட்டி மாடிக்குச் செல்ல படிகள் என பழமை மாறாத அழகோடு திருவல்லிக்கேணியில் இருந்தது வீடு!

பைரவி அவர்களை ஏறிட்டபடி குளியலறை நோக்கி நடந்தாள்.

கிருத்திகா மாவைத் திரட்டி தினசரி பேப்பர் மீது பரப்பிக் கொண்டிருக்க... அண்ணி செல்வி... கடாயில் கொதிக்கும் எண்ணெயில் சுட்டு எடுத்துக் கொண்டிருந்தாள்.

சீராளன் அலுவலகம் செல்லும் அவசரத்தோடு டைனிங் டேபிள் முன் அமர்ந்திருந்தான். அம்மா பூரிகளை கிண்ணத்தில் அடுக்கி டேபிள் மேல் வைத்தாள்.

தாத்தா பூஜையில் மும்முரமாகி இருந்தார்.

"ஓம் கணேசனே...

ஓம் கணநாயகனே...

ஓம் கலியுகநாதனே...

ஓம் கற்பகத்தருவே..."

சங்கரபாண்டியனின் குரல் கணீரென, வீடு முழுக்க எதிரொலித்தது.

"சீக்கிரம் வையம்மா... ஆபீஸ்க்கு போக வேணாமா?" அவசரப்படுத்தினான் சீராளன்.

"கொஞ்சம் இருப்பா... முதல்ல பூஜைக்கு குடுத்துட்டு வந்திடறேன்!"

"எந்த சாமிம்மா... பூரி மசாலாவை கேக்குது?" என்றான் கிண்டலாய்.

"தாத்தா காதுல விழுந்துடப் போகுது. இன்னைக்கு நேத்தா நடக்குது? எந்த பலகாரம் செஞ்சாலும் பூஜைல வச்சுட்டு சாப்பிடற பழக்கம் உங்க தாத்தாவுக்கு! அது அவரோட நம்பிக்கை... இரு வந்துட்டேன்..." என்றபடி தட்டில் வைத்த பூரியோடு பூஜையறைக்குச் சென்றாள்.

"மாமா..."

சங்கரபாண்டியன் தட்டை நிமிர்ந்து பார்த்தார்.

"ஒண்ணுதானா வச்சிருக்கே? இன்னொன்னும் கொண்டு வா! என்ன அப்படி பாக்கறே? காக்காவுக்கு கூட ஒண்ணு வைக்கிறதுல... யாரு வயிறாவது காயப் போகுதா என்ன? போம்மா... கொண்டு வா!"

ஜெயலட்சுமி மாமனார் பேச்சை மறுக்காமல் இன்னொரு பூரி வைத்துத் தந்தாள்.

சீராளன் சிரித்தபடியே சாப்பிட்டான்.

"நம்ம வீட்டு டிபனை சாப்பிட்டு... யாரு நல்லாயிருக்காங்களோ இல்லையோ, ஆனா நம்ம வீட்டுக்கு வர்ற காக்காவெல்லாம் நல்லா கொழு கொழுன்னு இருக்குதுங்க!"



"ஸ்ஸ்... என்ன நீ... தாத்தாவை கிண்டல் பண்ணிக்கிட்டு?" அம்மா பயத்துடன் அதட்டினாள்.

"காக்காவதானே சொன்னேன்? சரி விடு! செல்வி... சுருதி எங்கே? சாப்பிட்டாளா?"

"இன்னும் இல்லைங்க! அத்தே.. அவளுக்கு ஊட்டி விட்டுடுங்களேன். ஸ்கூலுக்கு டைமாய்டுச்சு... வேன் வந்துடும்!"

"சரிம்மா!"

அப்போது... அவர்களை பார்த்தபடி குளியலறை நோக்கி நடந்த பைரவியை... சீராளன் எரித்து விடுவதைப் போல் முறைத்தான்.

○○○



சீராளன் ஆபீஸ் போய் விட்டிருந்தான். கிருத்திகா கல்லூரிக்குக் கிளம்ப தயாராகிக் கொண்டிருந்தாள். செல்வி தங்கள் அறையில் அடைபட்டிருந்தாள்.

சங்கரபாண்டியன் அன்றைய நாளிதழை விரித்துக் கொண்டு ஹால் ஊஞ்சலில் அமர்ந்திருந்தார்.

ஜெயலட்சுமி அருகில் வந்தாள்.

"மாமா... டிபன் ரெடியாச்சு. எடுத்து வைக்கவா?"

"இன்னும் காக்காவுக்கு வைக்கலே... அப்புறம் சாப்பிடறேன்."

"காக்காவுக்கு நான் வச்சுட்டு வரவா?"

"அடடா... அதையெல்லாம் நான் பாத்துக்கறேன் ஜெயா. சஞ்சீவிக்கு கஞ்சி குடுத்துட்டியா?"

"இல்லே மாமா!"

"டைம் என்ன ஆச்சு! இன்னும் தாமதம்... போம்மா... முதல்ல அவனைப் போய் கவனி. எனக்கு பசிக்கும்போது நான் சாப்பிட்டுக்கறேன்!" சற்றே கோபமாய் கத்த... ஜெயலட்சுமி மிரண்டு போய் நகர்ந்தாள்.

அவள் சென்ற பின்பு தினசரியை இறக்கி எதிர்பக்கம் பார்த்தார்.

பாத்ரூம் கதவுத் திறந்து வெளிப்பட்ட பைரவி... துவைத்த துணிகளை வாளியில் நிரப்பி... மாடிப்படி ஏறினாள்.

அக்கம்பக்கம் பார்த்த சங்கரபாண்டியன் தினசரியை மடித்து வைத்துவிட்டு, பூஜையறையில் தட்டில் காக்காவுக்கென்று வைக்கப்பட்டிருந்த பூரியை எடுத்துக் கொண்டு மாடிப்படி ஏறினார்.

பைரவி கொடியில் துணிகளை பிழிந்து உலர்த்திக் கொண்டிருந்தாள்.

தாத்தா அவளையே சிறிது நேரம் வாஞ்சையுடன் பார்த்தவர், மெல்ல "பைரவி" என்றழைத்தார்.

திகைத்து திரும்பினாள்.

"தா..த்..தா!"

"இப்படி வாம்மா!"

வந்தாள்.

"இளைச்சிப் போயிட்டியேடா!" அவள் தலையை வாஞ்சையுடன் தடவினார்.

அந்த அன்பில் கண்மூடி சில கணங்கள் நெக்குருகி திளைத்தவள்... சிரித்தாள்.

"யாராச்சும் பார்த்துடப் போறாங்க!"

"என்னக் கொடுமையம்மா இது! என் பேத்திக்கிட்ட பேசக் கூட பயப்பட வேண்டிய தூர்ப்பாக்கியம். சரி... அதைப் போட்டுட்டு இதை சாப்பிடு!"

"நா.. நானா? ம்ஹூம்... வேணாம் தாத்தா!"

"ஏன்டா?"

"அசிங்கமாயிருக்கு தாத்தா! காக்காவுக்கு வைக்கிற பலகாரத்தை அவங்களுக்குத் தெரியாம... நான் அந்தளவுக்கு மோசமாயிடல தாத்தா!"

"உன் தாத்தா... இன்னும் பென்ஷன் வாங்கறேன். என் சம்பாத்தியம் இந்த வீட்டு அரிசி பருப்புல கலந்து இருக்கு. இது அவங்கப் பொருள் இல்லேடா. தாத்தாவோட பணம்!"

"..........?!"

"புரியுது. காக்காவுக்கு எதுக்கு சாப்பாடு வைக்கறோம்? இறந்துப் போன இந்த வீட்டு முன்னோர்கள் காக்கை ரூபத்துல சாப்பிட வருவாங்கன்னுதானே? என் பொண்டாட்டி காமாட்சிக்காக இந்த படையல வைக்கிறேன். உன் பாட்டிதான் உனக்கு பைரவின்னு ஆசையா பேர் வச்சா. அவ பேத்தி வயிறு காஞ்சு கிடக்கறதுல அவளுக்கு எம்புட்டு வருத்தமிருக்கும்! உனக்கு பூரிமசாலான்னா உயிராச்சே? என் ராசாத்தி... எனக்காக இதை சாப்பிடுடா!"

தாத்தா நீட்டிய தட்டு... அவர் வயோதிகத்தால் லேசாய் நடுங்க... அந்த அன்பிற்காக வாங்கி சாப்பிட்டாள்.

ஆனாலும்... அது கசப்பாய் தொண்டைக்குள் இறங்கியது.

○○○

கலிங்கர் நிலைக்கண்ணாடி முன் நின்றபடி தன் உடையை சரிபார்த்தான்.

கறுப்பு பேண்ட்டிற்கு அடர் கடல் நீலக்கலர் சட்டை அணிந்திருந்தான்.

இப்படியும் அப்படியும் திரும்பி திரும்பிப் பார்த்தவன் திருப்தியுறாதவனாய், சட்டையைக் கழற்றி கட்டிலின் மேல் போட்டு விட்டு இள ரோஸ் நிற சட்டையை அணிந்தான்.

பாந்தமாய் இருந்தது.

மெல்ல புன்னகைத்தபடி... செண்ட்டை எடுத்து ஸ்ப்ரே பண்ணினான்.

அறை முழுக்கவே நறுமணம் பரவியது.

தலையை அழுந்த வாரியும் பம்மென்று அடங்காமல் நிமிர்ந்த... அவன் முகத்திற்கு மேலும் கம்பீரம் தந்தது.

அறைக்குள் தாட்சாயணி நுழைந்தாள்.

உயர்ரக காட்டன் புடவை. கோல்டு பிரேமிட்ட பவர் கண்ணாடி என ஸ்கூல் ஹெட்மிஸ்ட்ரஸ் மாதிரி தோற்றம் தந்தாள்.

"டிபன் ரெடியாயிருக்கு கலிங்கர்!"

"இல்லேம்மா... நான்தான் சொன்னேனே... கேஸ் விஷயமா வெளியேப் போறேன்! ரெஸிடென்ஸில ஒருத்தரை மீட் பண்றேன். என் பிரேக் பாஸ்ட் அங்கதான்னு சொல்லிட்டேனே!"

"நீ வீட்ல சாப்பிடறது ரொம்ப குறைஞ்சு போச்சப்பா... எப்பப் பாரு ஓட்டல், ஓட்டல்ங்கறே!" தாட்சாயணி சலிப்பாய் சொன்னாள்.

"நீதானேம்மா உன் பிள்ளைய லாயராக்கிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டே? இன்னைக்கு உன் பிள்ளை லீடிங் கிரிமினல் லாயர்! பசி, தூக்கம், சாப்பாடெல்லாம் மறந்து வெறித்தனமா உழைச்சதால அடைஞ்ச வெற்றிம்மா இது! ஒரு சிட்டிங்கிற்கு அம்பதாயிரம் பீஸ்! உன் பிள்ளை காஸ்ட்லி லாயர்ம்மா!"

"அதெல்லாம் சரி... அதுக்காக..."

"சரி... விடு... ரொம்ப பேசினினா... அம்பதாயிரம் பீஸ் கேட்டுடுவேன்... சரி நைட்டுக்கு எவ்வளவு நேரமானாலும் வீட்லதான் சாப்பிடுவேன். மல்லி நிறைய தட்டிப் போட்டு காரமா ரசம் வைப்பியே! அதை பண்ணிட்டு, சிக்கனை சுருள வதக்கி வச்சிடும்மா. தயவுப் பண்ணி நீ உன் கையால செஞ்சிடு. சமையல்காரன் வேண்டாம்... ஓக்கே!"

"சரிடா..." அம்மா வெகுவாய் சந்தோஷப்பட்டாள்.

"வர்றேம்மா..."

"ஒரு நிமிஷம்!"

"என்னம்மா?"

"அஞ்சு நிமிஷம் பேசணும்!"

கலிங்கர் சலிப்புடன் பார்த்தான்.

"என்ன சொல்லு?"

"இந்த போட்டோவெல்லாம் பாரேன்!"

"என்ன போட்டோ?"

"தெரியாத மாதிரி கேக்கறியே? என் மருமக... இதிலே எங்கேயோ ஒளிஞ்சிருக்கா! அது யாருன்னு நீதான் கண்டுபிடிச்சுத் தரணும்!"

"போச்சுடா... மறுபடி ஆரம்பிச்சிட்டியே... எனக்குதான் டைமில்லேன்னு சொல்றேனே..."

"தினமும் இதையேதானப்பா சொல்றே?"

"சரி.. நாளைக்குப் பார்க்கறேன்!"

"உன் லாயர் புத்தியை எங்கிட்டேயே காட்டணுமா? இந்த விஷயத்திலே தினமும் வாய்தா வாங்கறே? பிடிவாரண்ட் போட்டாதான் அடங்குவே!"

"என் அம்மாவுன்னு சரியா நிரூபிச்சிட்டேம்மா... நல்லாப் பேசறே!"

"உன் பாராட்டெல்லாம் வேண்டாம். இந்தா... இதை கார்ல போகும்போதாவது பார்த்துட்டு பதிலைச் சொல்லு!" என்றபடி ஒரு கவரை அவன் கையில் வைத்து திணித்தாள்.

கவர் கனமாய் இருந்தது.

"சரி" என்றவன் வெளியே வந்தான்.

கார் கதவை திறந்து வைத்து காத்திருந்தான் டிரைவர் வேலு!

கலிங்கர் கவரை பின்சீட்டில் போட்டு விட்டு அமர்ந்தான்.

கார் வேகமெடுக்க கேஸ் கட்டை பிரித்து படித்தான்.

கலிங்கர்... இருபத்தி ஒன்பது வயது இளைஞன். திரைப்பட நடிகர் நரேந்திரன் சாயலை அப்படியே வாங்கியிருந்தான். இன்று அவனைத் தெரியாதவர்கள் யாருமில்லை... என்றளவில் லீடிங் லாயராக இருப்பவன்.

அவனை நம்பி கேஸை ஒப்படைத்து விட்டால்... தகிடுதத்தம் பண்ணியாவது ஜெயிப்பான். அதில் நியாயம், அநியாயம் பார்ப்பதில்லை. ஆனால் இயல்பில் நல்லவன். அம்மாவிற்கு அடங்கிய பிள்ளை. உதவி என்று வருபவர்களை... மனம் குளிர அனுப்பி வைப்பான்.

○○○



அடுத்தடுத்த போன்கள் வர... எல்லாமே கேஸ் சம்பந்தப்பட்டது என்பதால் பேசி விட்டு களைப்புடன் சாய்ந்தமர்ந்தான்.

கையில் கவர் நிரட... எடுத்துப் பார்த்தான். ஏகப்பட்ட போட்டோக்கள்.

அம்மா... அவன் திருமணத்தில் எவ்வளவு மும்முரமாய் இருக்கிறார்கள் என்பது புரிந்தது.

அவனுக்கும் புரியாமலில்லை.

இருபத்தொன்பது என்பது சின்ன வயதில்லைதான். ஆனால், என்னவோ திருமணத்தில் மனம் லயிக்கவில்லை.

அவனை புரிந்துக் கொண்டவளாய், படித்தவளாய், அழகானவளாய்... இப்படி எந்த வரையறையும் அவன் எதிர்கால மனைவி விஷயத்தில் வைத்துக் கொண்டதில்லை.

ஒரு பெண்ணை பார்த்ததுமே... 'அட' என மனசு ஆச்சரியப்படணும். ஏதாவது ஒரு விஷயமாவது சர்க்க வேண்டும்.

விதவிதமாய் கலைப் பொருட்கள் வீற்றிருந்தாலும், பீச் மணலில்... சில வண்ணங்கள் இணைந்து வளைந்து நெளிந்து கோலம் போட்டது போல் சின்ன சங்கு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல ஆவலைத் தூண்டுமே! அதைப் போன்ற ஒரு சின்ன சந்தோஷம் மனசைக் கிளற வேண்டும் என்று நினைத்தான்.

போட்டோவில் இருந்த பெண்கள் நடிகைகளை மிஞ்சும் ஒப்பனையில், அழகில் இருந்தனர்.

அதில் ஒருத்தியைக் கூட செலக்ட் பண்ண மனம் வராமல்... கவரில் போட்டு விட்டு கண்களை வெளியில் பதித்தான்.

காரின் ஓட்டத்தில் பின்னோக்கிச் சென்ற மனிதர்கள், வாகன ஓட்டிகள், வாடகைக் குழந்தைகளை இடுப்பில் வைத்து பிச்சை எடுக்கும் பெண்கள் என வகை வகையான மனிதர்கள்.

கார் சிக்னலுக்காக நின்றபோது... இடதுப்பக்க பிளாட்பாரமில் இளம் பெண்ணொருத்தி... போனில் பேசிக் கொண்டே... வலக்கையில் வைத்திருந்த கோன் ஐஸ்கிரீமை சுவைத்தபடி நடந்தவளை... மறுபடி பார்த்தான்.

ஜீன்ஸ், அடிதார் டாப்ஸ், து

## ஆம்லெட்டில் உலக சாதனை

உலக முட்டை தினத்தை அனுசரிக்கும் பொருட்டு துருக்கியைச் சேர்ந்த சமையல் வல்லுநர்கள் இணைந்து உலகின் மிகப் பெரிய ஆம்லெட்டை சமைத்து சாதனைப் படைத்து உள்ளனர்.

50 சமையல் வல்லுநர்கள் இணைந்து ஒரு லட்சத்து பத்தாயிரத்து பத்து முட்டைகளைக் கொண்டு ராட்சத சட்டியில் போட்டு 2½ மணி நேரம் செலவழித்து இந்த ராட்சத ஆம்லெட்டை படைத்துள்ளனர். இப்படி பெரிய ஆம்லெட்டை இதுவரை யாரும் போட்டு இருக்க முடியாது. இந்த ஆம்லெட்டை சமைக்க 432 லிட்டர் சமையல் எண்ணெய் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆம்லெட்டின் எடை 4.4 டன். இந்த வைபவம் முடிந்தவுடன் இதனைக் காண வந்த அனைவருக்கும் இந்த ஆம்லெட் பகிர்ந்து பரிமாறப்பட்டது.

முட்டை சாப்பிட்டால் உடல்நலத்திற்கு நல்லது என்பதால்தான் இவ்ளோ பெரிய ஆம்லெட்டை செய்து விட்டார்களோ?



பப்பளையின்றி, அதிசயமாய் விப்ஸ்டிக் கூட இல்லாமல்... காதோரமுடிகள் காற்றில் அலைந்திருக்க... ரம்மியமாய் இருந்தாள்.

பேசும் போது கண்கள் வியப்பில் விரிய, தலையை ஆட்டி பேசி, ஆனாலும் கருமமே கண்ணாக ஜுஸ்கீரிமை சுவைத்த விதம்...

கலிங்கர் புன்னகைத்தான்.

கார் புறப்பட்டது.

மறுபடி திரும்பிப் பார்த்தான்.

○○○

அன்று அவசரமாய் போயாக வேண்டும். பைரவி கையில் வாளியுடன் நின்றிருந்தாள்.

அண்ணி பம்பை விடாமல் அடித்துக் கொண்டிருந்தாள். வரிசையாய் குடங்கள். கிருத்திகா அடித்து வைத்த தண்ணீர் குடத்தை உள்ளே தூக்கிச் சென்றாள். இன்னும் ஐந்து குடங்கள் காலியாக இருந்தன.

எப்போது அடித்து முடித்து... நான் எப்போது தண்ணீர் பிடித்து குளித்து...?

ஒன்பது மணிக்கெல்லாம்... அவளுக்கு கொடுத்த அசைன்மென்டை அட்டெண்ட் பண்ணியாகணுமே!

"அ...அண்ணி!"

செல்வியின் முகம் ஏறிடாமலே கடுகடுப்பானது.

"ஒ... ஒரு பக்கெட் அடிச்சுக்கறேனே... அவசரமா போகணும்!"

"கிருத்தி... சீக்கிரம் அண்டாவுல ஊத்திட்டு வா!"

பைரவி சங்கடத்துடன் காத்திருந்தாள்.

ஒரு வழியாய் அடித்து முடித்து பம்பை விட... பைரவி வேகமாக அடித்தாள்.

அதுவரை பேப்பரை எடுத்து புரட்டிக் கொண்டிருந்த கிருத்திகா... இவளைப் பார்த்ததுமே பாத்ருமில் நுழைய முற்பட... பைரவி இடக்கையால் அவளைத் தடுத்தாள்.

"ப்ளீஸ் கிருத்தி... அவசரமா கிளம்பணும்.. நான் குளிச்சுக்கறேன்..."

"கையை விடு!"

"ப்ளீஸ்டி..."

"கைய விடுன்னு சொல்றேன்!"

சொல்லி முடிக்கவில்லை... கிருத்திகாவை இழுத்து வைத்து கன்னத்தில் பளாரென்று அறைந்தான் சிரானன்.

"என்ன வெட்டிப்பேச்சு? கெட்டு, சீரழிய துடியா கெட்டுட்டிருக்கியா!"

பைரவி வெலவெலத்து பின்னோக்கி நகர, கிருத்திகா அழுதபடி பாத்ருமிற்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

சிரானன் பைரவியை முறைத்தபடி அகல... கூனிக் குறுகிப் போனாள்.

○○○

"நீங்க பண்ணினது ரொம்பத் தப்புங்க! கிருத்தி என்னப் பண்ணிட்டாள்னு இப்படி அடிச்சீங்க?" செல்வி கேட்டாள்.

"அவ இருக்கிற எடத்துல இவ ஏன் நிற்கணும்?"

"இதென்ன அநியாயம்? குளிக்கறதுக்காக போயிருக்கா. அந்த சனியன்தான் வலிய வந்து நம்ம கிருத்திக்கிட்ட பேசியிருக்கு."

"பேசினா... மூஞ்சியில காறித் துப்பிட்டுல்ல வந்திருக்கணும்?"

"ஏங்க... நான் தண்ணி அடிச்சிட்டிருந்தப்ப ஒரு மணிநேரமா பக்கத்திலேயே நின்னுட்டிருக்கா. அதுக்காக என்னை அடிச்சிடுவீங்களா? இந்த வீட்லயே எடம் கொடுத்ததாலதானே... இத்தனை அவஸ்தையும்?"

"நானா சேர்த்தேன்? அதோ அந்த கெழம்தான்... இது என் வீடு... அவளுக்கும் உரிமையிருக்கு... அவளை விரட்ட உங்க யாருக்கும் உரிமையில்லேன்னு பேசி... சனியனை நடுவீட்ல உட்கார வச்சிடுச்சு. போதாதுக்கு அவசர அவசரமா... அவளுக்கும் இந்த வீட்ல பங்கு இருக்குன்னு உயிலும் எழுதிடுச்சு. என்ன பண்ணச் சொல்றே? தினமும் கால்ல அசிங்கத்தை சகிச்சிட்டு வந்துக் கழுவற மாதிரி, அவ முகத்தைப் பார்த்து நொந்துக்க வேண்டியதாப் போச்சு. சரி... சரி... கிருத்திகா சாப்பிட்டாளா?"

"ம்ஹூம்..."

"புரிஞ்சுக்க மாட்டாளா? படிச்சவதானே? இவளை அடிச்சா... இவளை அடிச்ச மாதிரி ஆகுமா? அந்த சனியனை அடிச்ச மாதிரி..."

"வலி என்னமோ... இவளுக்குத்தானே? இனிமே விசுக்குன்னு கையத் தூக்கிடாதீங்க... நாளைக்கு இன்னொரு வீட்ல வாழப்போறப் பொண்ணு!"

"சரி.. எதையாவது சொல்லி அவளை சாப்பிட வச்சு அனுப்பு. நேரமாச்சு. நான் ஈவ்னிங் வந்து அவளை சமாதானப்படுத்தறேன்!"

"ம்..."

○○○



"ஜெயா!"

கீரையை ஆய்ந்துக் கொண்டிருந்த ஜெயலட்சுமி அப்படியே போட்டு விட்டு மாமனார் அருகில் வந்தாள்.

"என்ன மாமா?"

"சஞ்சீவிக்கு சாப்பிட குடுத்துட்டியா?"

"ஆச்சு மாமா!"

"கிருத்தி காலேஜுக்கு போயிட்டாளா?"

"போயிட்டாளே!"

"என்னம்மா நடக்குது இந்த வீட்ல?"

"மா...மா?!" புரியாமல் பார்த்தாள்.

"உன் புள்ள... எதுக்காக கிருத்தியை அடிச்சான்?!"

"நீங்கதான் பார்த்துக்கிட்டிருந்தீங்களே மாமா"

"அதனாலதாம்மா கேக்கறேன்! நீங்கள்லாம் கண்ணை கறுப்புத் துணியால கட்டிக்கிட்டிருந்தீங்களான்னு கேக்கத்தான் கேட்டேன்!"

".........?!"

"அந்தப் புள்ள... நான் முதல்ல குளிச்சுக்கட்டுமான்னு கேட்டது தப்பா? இன்னும் எத்தனை காலத்துக்கு உங்க நாக்கால... அவளை வெட்டி வெட்டி கூறு போட்டுக்கிட்டு இருக்கப் போறீங்க?"

"மாமா... என்னை தப்பா எடுத்துக்காதீங்க... அவளைப் பத்தி என்கிட்டே பேசாதீங்க...!"

சங்கரபாண்டியன் அவளை முறைத்துப் பார்த்து, கோபத்துடன் "போ" என்றார்.

○○○

பஸ் ஸ்டாண்டில் கிருத்திகா நின்றிருப்பதை பார்த்தவள் வேகமாய் அவளை நோக்கிச் சென்றாள்.

"கிருத்தி..."

திடுக்கிட்டுத் திரும்பிய கிருத்திகா பைரவியைப் பார்த்து வெறுப்பாய் திட்டினாள்.

"எதுக்கு என்னையே சுத்தி சுத்தி வர்றே? நான் பொண்ணு... என்னால உனக்கெந்த பிரயோஜனமும் இல்லை! எங்கண்ணன் பார்த்தா கூறுப் போட்டும்... போயிடு!" வேறொரு அர்த்தத்தில் வார்த்தையை கொட்ட... துடித்துப் போய்விட்டாள் பைரவி.

"ஏய்... நீயுமா இப்படி பேசறே? நான் ஸாரி கேக்கத்தான்...!"

"சீ... ஆட்டோ!" கடந்த ஆட்டோவை நிறுத்தி ஏறி புறப்பட்டாள் கிருத்திகா.

நெஞ்சில் விழுந்த அடியில் சுருண்டு போய் ஸ்தம்பித்து நின்றிருந்தாள் பைரவி.

○○○



சின்ன ஓட்டல்தான்! ஆனால் எப்போதும் கூட்டம் அதிகமிருக்கும். உணவு அவ்வளவு சுவையாக இருக்கும். அதுவும் மதிய உணவில் அரைத்து விட்ட சாம்பாருக்கும், வத்தக் குழம்புக்கும் நாக்கை தொங்க போட்டுக் கொண்டு வந்து விடும் கூட்டம் நிரந்தரம். அந்த சுவை ஸ்டார் ஓட்டலில் கூட சாத்தியமில்லை.

கலிங்கர் தன் தொழிலில் எவ்வளவுதான் பிஸியாய் இருந்தாலும், உணவிற்காக நல்ல ஓட்டலை தேர்ந்தெடுப்பதிலும் எக்ஸ்பர்ட்!

சமயம் வாய்க்கும் போதெல்லாம், இந்த 'அலங்கார் ஓட்டலு'க்கும் வரத் தவறுவதில்லை.

அவனைச் சுற்றி கேஸ் சம்பந்தப்பட்ட பிரமுகர்களும் இருந்தனர்.

"அந்த கேரேஜ் மறுபடி உங்க கைக்கு வரணும் அவ்ளோதானே? விடுங்க பார்த்துக்கலாம்!"

"என் சொந்த எடத்துல வாடகைக்கு வந்துட்டு சொந்தம் கொண்டாடிட்டு இருக்கான்!"

"விடுங்க தனபால்! உங்க ஆட்கள்ல பத்துபேரை ஷெட்டுக்கு அனுப்பி வைங்க... கரெக்டா நைட்டு ரெண்டு மணிக்கு உங்க எடம் உங்க கையிலே... பணம் கொஞ்சம் அதிகம் செலவாகும். அந்த ஏரியா போலீஸ் அதிகாரிகளோட கண்ணைக் கட்றதுக்குத்தான்! சில விஷயங்கள் சட்டத்தோட அணுகலாம். சில விஷயங்களை தடாலடியா அணுகலாம். என்னா உங்களோடது நியாயமான கோரிக்கை. இதுக்கு சட்டத்துல தாமதமான தீர்ப்புதான் கிடைக்கும். இப்ப பண்ணப்போறது சீரியஸ்!"

கலிங்கர் தன் புத்திக்கூர்மையை நீட்டிக் காட்டினான்.

"எவ்ளோ வேணாலும் தர்றேன் சார்!"

"ஓக்கே... கவலைய விடுங்க!" கலிங்கர் பேசிக் கொண்டே சுற்றிலும் பார்வையை ஓட விட்டான்.

ஓரிடத்தில் அவன் கண்கள்

ஆச்சர்யத்தோடு நின்றது.

அவன்... அவன்தானே? அவனேதான்!

அன்று ரோட்டோரம் ஐஸ்கிரீம் சாப்பிட்டபடி நடந்துச் சென்ற பெண்!

ஒரு டேபிளில் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் இருந்தாள். கூட வயதான இரண்டு பெண்மணிகளும், ஒரு ஆணும் இருந்தனர்.

இவர்களை கண்டுக் கொள்ளாமல் சாப்பிட்டான். அவர்கள் மூவர் மட்டும் பேசிக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் சர்வர் ஒரு பார்சல் சாப்பாட்டை கொண்டு வந்து தந்தார்.

கையை கழுவிவிட்டு சாப்பாட்டுடன் வெளியில் வந்தான்.

கலிங்கரும், உடன் வந்தவர்களும் அதே வேளையில் வெளியில் வந்தனர்.

அங்கே... அந்தப் பெண் செய்த காரியம் மேலும் வியப்பைத் தந்தது.

ஓட்டல் வாசலில் எண்பது, எண்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மூதாட்டி, முகத்தில் ஏகப்பட்ட சுருக்கங்களுடன், கண்களில் பசியுடன் அமர்ந்திருக்க, சாப்பாட்டு பார்சலை அவள் கையில் கொடுத்து விட்டு... நடந்துச் சென்று விட்டாள்.

அவளைப் பார்க்கையில் மனதில் ஒரு இதம் பரவுவதை உணர்ந்தான்.

OOO

அன்று கோர்ட்டுக்கு கிளம்பும் போது, கலிங்கர் உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

"அம்மா..."

"......!"

"அம்மா நான் கிளம்பறேன்!"

"சரிப்பா... நானும் புறப்படறேன்... அப்படியே என்னை சென்ட்ரல்ல இறக்கி விட்டுடேன்!" புடவையை சரி செய்தபடி, கையில் பெட்டியுடன் வந்தாள் தாட்சாயணி!

கலிங்கர் முகம் மாறினான்.

"எங்கேம்மா கிளம்பறே?"

"காரைக்குடிக்கு!"

"திடீர்னு ஏன்?"

"இங்கேர்ந்து மட்டும் என்ன சாதிச்சுட்டேன்? நீ பிஸியான வக்கீல்! காலைல கிளம்பினா, நைட்டு வர சில சமயம் மணி ஒன்னு, ரெண்டுக்கூட ஆகிடுது. உன்னையும் குத்தம் சொல்ல முடியாது. உன் தொழில் அப்படி. இவ்ளோ பெரிய வீட்ல வேலைக்காரங்க முகத்தை மட்டும் பார்த்துக்கிட்டு எத்தனை வருஷம்தான் காலம் தள்ள முடியும்? லட்டு லட்டா பொண்ணுங்களை பார்த்தாலும், உனக்கு யாரையும் பிடிக்க மாட்டேங்குது. மருமக, பேரக்குழந்தைங்கன்னு ஆசைப்பட்டேன். ப்ச்... அதுக்கும் குடுப்பினை இல்லை.. உங்கப்பா போன பிறகு உன்னை வளர்த்து ஆளாக்கறது மட்டும்தான் குறிக்கோளா இருந்தது. அப்ப தனிமை உறைக்கல. இப்ப கஷ்டமா இருக்குப்பா... காரைக்குடி நான் பொறந்து வளர்ந்த ஊர். என் ஜாதி ஜனங்க இருக்கிற ஊர். கடலாட்டம் வீடு, தோட்டம்னு என் வாழ்நாளை அங்கே கழிச்சிடறேன்ப்பா!"

அம்மா பேசப் பேச... அவள் பேச்சின் தீவிரம் உணர்ந்து பயந்துப் போனான்.

"அம்மா... என்னம்மா இப்படியெல்லாம் பேசறே? மொதல்ல அந்த பெட்டியக் குடு!"

கையை இழுத்துக் கொண்டான்.

"கலிங்கா... உன்னை கஷ்டப்படுத்தவோ, மிரட்டவோ, பணிய வைக்கவோ நான் இதைப் பண்ணலே! தனிமை கொல்லுதுப்பா! இதை விட்டா வேற வழித் தெரியலே...."

"நீ என்னைக் கொல்றேம்மா! முதல்ல உள்ளே வா!" அவள் கைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றான்.

"எப்படிம்மா... என்னை பிரிஞ்சுப் போக முடிவு எடுத்தே?"

"இப்பவும் இந்த வீட்ல அப்படித்தானே இருக்கேன். இதோ... நீ கிளம்பறப்ப பார்க்கறேன், நைட்டு நான் தூங்கிட்டப் பிறகு வர்றே!"

"அம்மா... என்மேல கோவமா இருக்கியா?"

"நீ என்ன தப்புப் பண்ணினே கோபப்பட!"

சிறிது நேரம் கலிங்கர் மவுனமாக இருந்தான். பிறகு அம்மாவின் இரு கைகளையும் ஒரு சேரப் பற்றிக் கொண்டான்.

"எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கற மனுஷனா இருக்கேன். சமயத்துல குற்றவாளிங்களை கூட என் வாதத்திறமையால காப்பாத்தியிருக்கேன். ஆனா, என் அம்மாவை தனிமைச் சிறையிலேயில்லே அடைச்சு வச்சிருந்திருக்கேன்? நான் எதையும் வேணுமின்னே செய்யலேம்மா! நீங்க பார்த்தப் பொண்ணுங்கள்லாம் அழகா இருந்தாங்க. ஆனா, எந்தப் பொண்ணுமே ஒரு அந்நியோன்ய உணர்வை ஏற்படுத்தலே. இனி, இந்த விஷயத்திலே நான் தலையிடலே. நீயே ஒரு பொண்ணைப் பாரு. உனக்கு பிடிச்சாப் போதும். பிக்ஸ் பண்ணு. ஜம்முனு வந்து தாலி கட்றேன். ஓகேவா?"

"நிஜமாவா சொல்றே?"

"சத்தியமா... நான் சொல்வதெல்லாம் உண்மை! உண்மையைத் தவிர வேறில்லை."

முதுகை வளைத்துக் கிண்டலாய் சொல்ல... தாட்சாயணி கண்ணாடியைக் கழற்றி, கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

"இது போதும்ப்பா!"

"சரி... நான் கிளம்பட்டுமா!"

"போய் வா!"

காரில் ஏறி அமர்ந்தவனுக்கு அப்பெண்ணின் முகம் கண் முன் வந்து போனது.

'மற்றவர் பசியறிந்து உணவு வாங்கித் தரும் கனிவான முகம்... யாருக்கு சொந்தமாகப் போகிறது?'

தேவையற்ற கேள்வி தன்னுள் எழுவதை உணர்ந்து திடுக்கிட்ட கலிங்கர், கேஸ் கட்டை பிரித்து படிக்க ஆரம்பித்தான்.

OOO

அம்மா அவ்வளவு வேகமாய் இருப்பாள் என்று கலிங்கர் எதிர்பார்க்கவில்லை.

இரண்டாவது நாளே... ஒரு பெண்ணின் போட்டோவை காண்பித்து "இவளைத்தான் நான் செலக்ட் பண்ணி இருக்கேன். உனக்கு பிடிச்சிருக்கா?" என்று கேட்டபோது, போட்டோவை வாங்கிக் கொண்டு சிரித்தான்.

பெண் தேவதைப் போலிருந்தாள். அவளைப் பற்றிய விவரங்களை அம்மா கூறினாள். ஆனால் எதுவுமே அவனுள் பதியவில்லை.... அந்தப் பெண் உட்பட!

"உனக்கு பிடிச்சிருந்தாப் போதும்மா!" திருப்பிக் கொடுத்தான்.

"சரி... மேற்கொண்டு உன்னை எதுவும் கேட்டு டிஸ்டர்ப் பண்ண மாட்டேன். ஆகவேண்டிய வேலையை நானே பார்த்துக்கிறேன்."

OOO

## தைவானில் நண்டுகள் ஊர்வலம்!



தைவானில் கென்டிங் தேசிய பூங்கா அருகே கடற்கரை உள்ளது. இதையொட்டி பிரதான கடற்கரை சாலை செல்கிறது. இங்கு நண்டுகள் அதிகம். சாலையில் தாராளமாக நண்டுகள் நடமாடுவதை இங்கு காணமுடியும்.

40 வகையான நண்டு இனங்கள் இங்கு உண்டு. இந்த நண்டுகள் கடற்கரையில்தான் விளையாடும் என்று பார்த்தால், நடுசாலையிலும் விளையாடத் தொடங்கி விடுகின்றன. குஞ்சுகளுடன் சாலையில் நண்டுகள் ஆயிரக்கணக்கில் சாரை சாரையாக நடமாட தினமும் ஆரம்பித்து விடுவதால், அடிக்கடி இப்பகுதியில் போக்குவரத்து தடை ஏற்படுகிறது.

சாலையில் ஊர்ந்து செல்லும் நண்டுகளை நசுக்க மனமில்லாமல் வாகன ஓட்டிகளும் தங்கள் வாகனங்களை நிறுத்தி விட்டு, நண்டுகள் சாலையைக் கடந்த பிறகே போக்குவரத்தை ஆரம்பிக்கிறார்கள்.

தைவான் மக்களிடம் நண்டுகளுக்குத்தான் என்ன மரியாதை?



5

முக்கியமான ஒரு பொலிட்டிக்கல் நபரை சந்திக்க வேண்டியிருந்தது. அ ம் ம ா தி ரி ய ா ன சமயங்களில் கலிங்கர் காரைத் தானே ஓட்டிச் செல்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் கலிங்கர்.

"அடி அம்மாடி... இளமனசொன்னு
றெக்கை கட்டி பறக்குது தன்னாலே..."

அவனுக்கு மிகவும் பிடித்தப் பாடல்! மனசு சங்கடமாய் உணரும்போதெல்லாம் அந்தப் பாடலை ஒலிக்கவிட்டு கேட்பான். காரில் அந்த கேசட்டை எப்போதும் வைத்திருப்பான்.

அந்தக் குரலும், சுருதியும், இசையும் அவனை உருக்கின.

மனசு லயித்து... கூடவே சேர்ந்து ஹம்மிங் பண்ணிக் கொண்டிருந்த கலிங்கர், சடாரென பிரேக் போட்டு காரை நிறுத்தினான்.

காரணம்... அவள்!

அவனை வியப்பில் ஆழ்த்தியப் பெண்!

சாலையோரம் இடக்கை விரலை ஆட்டி நிறுத்தச் சொன்னது... சாட்சாத் அவளேதான்!

ஆச்சர்யமுடன் கார் கண்ணாடியை இறக்கினான்.

"யெஸ்..."

காரில் அமர்ந்திருந்த அந்த கம்பீரமான இளைஞனை கண்டதும் பைரவியின் மனசு படபடவென துடித்தது.

அவனிடம் பேசிப் பழக வேண்டுமென்ற ஆர்வத்தை அவன் விழிகள் உண்டாக்கியது.

'சே... இவனிடமா என் வேலையைக் காட்ட வேண்டும்?' தன்னை அசிங்கமாய் உணர்ந்தாள்.

"ஹலோ..."

"அ...." தன்னிலை மீண்டாள் பைரவி.

"நான் வாணிமகால் வரை போகணும். கொஞ்சம் ட்ராப் பண்ண முடியுமா?"

பெண்கள் வலிய வந்து லிப்ட் கேட்கும் கலாசாரம் ஏனோ கலிங்கருக்கு பிடிக்காது. அவள் அப்படிக் கேட்டது சங்கடமாய் இருந்தது.

"ஓ...யெஸ்... கெட் இன்!"

பின்பக்க தகவை... எட்டித் திறக்க முற்பட.....

"இஃப்யூ டோண்ட் மைண்ட்.... ப்ரண்ட்லேயே உக்காருறேனே..." என்றாள்.

"ம்...ஓக்கே!"

அமர்ந்தாள்.

அவள் மீது மெலிதாய் செண்ட்டின் நறுமணம். அதிகமாய் மூக்கை உறுத்தாத இனிய வாசம்.

ஷால் போடாமல் சல்வார் அணிந்திருந்தாள். உடலை ஒட்டி இறுக்கமாய் அணிந்திருந்ததால்... இளமை வழிந்தது.

முகத்தில் ஒருவித கட்டித்தனம்.

"ஐயம்... காவ்யா... உங்கப் பேரை தெரிஞ்சுக்கலாமா?"

"கலிங்கர்!"

"ஹிஸ்ட்டாரிக்கல் நேம்! பட் ரேர் நேம். வெரி நைஸ்!"

"நீங்க என்னப் பண்றீங்க?"

"பைனல் இயர் விஸ்காம்... எத்திராஜ்ல படிக்கிறேன்..."

"ஓ..."

"நீங்க?"

"ம்... பிஸினஸ்!"

அவள் இந்தளவு பேசுவது... அதுவும் அப்போதுதான் அறிமுகமான ஒரு ஆணிடம்... பிடிக்கவில்லை! அதனால்தான் பொய் சொன்னான்.

"யூ லுக்கிங் வெரி ஸ்மார்ட் சார்!"

"........?"

"ஒரு தாங்க்ஸ் சொல்லலாமே?"

"அது எனக்கு ஏற்கனவேத் தெரியும். ஸோ... வொய் தாங்க்ஸ்?"

"அட.... நல்லாப் பேசறீங்க? இதுவே வேற ஆண்களா இருந்தா... வழிஞ்சு தோள்மேல கையப் போட்ருவாங்க?"

"இப்ப... நான் போடலேன்னு கவலைப்படறீங்களா? இல்லே... போட்டா சந்தோஷப்படுவீங்களா?"

"ரெண்டுமே ஒண்ணுதானே மிஸ்டர் கலிங்கர்? டைமிருந்தா... வாங்களேன் மீல்ஸ் சாப்பிடலாம்?"

கலிங்கர் அவளை ஆச்சர்யமாய் ஏறிட்டான்.

அவனும் அவளை கிறக்கமாய் பார்த்தபடி அவன் இடக்கரத்தின் மீது தன் வலக்கரத்தை வைத்து அழுத்தினாள்.

"புல் மீல்ஸே சாப்பிடலாம்... ஒக்கே?" அவள் கண்ணடித்து சொன்னவிதம்... நொடிகளில் புரிய... உடைந்துப் போனான்.

'இவள்... இப்படிப்பட்டவளா? அன்று உணவை தானமாய் போட்டவள்... உடம்பையும் தானம் போடுபவளா? சே!'

சட்டென காரை நிறுத்தினான்.

"என்ன சார்?"

"இறங்கு!"

"நான் பணமெல்லாம் எதிர் பார்க்கலே..."

"பொண்ணாச்சேன்னு பார்க்கறேன்! மரியாதையா இறங்கு!"

"என்ன இப்படி பிஹேவ் பண்..."

"அடச்சீ... வாய மூடு! உடம்பு திமிரெடுத்தா கல்யாணம் பண்ணி செட்டிலாக வேண்டியதுதானே? என்னை என்னன்னு நெனச்சே? ச்சை!"

அவள் இறங்கியதும் கதவை பட்டென மூடி வேகமாய் புறப்பட்டான்.

கார் அவளை உரசிக் கொண்டுச் சென்றது.

பைரவி தோளை குலுக்கிக் கொண்டு, சிரித்தபடி திரும்பி நடந்தாள்.

○○○

அன்றிரவு உறக்கம் வராமல் தவித்தான் கலிங்கர்.

ஏகப்பட்ட வேலைகள் இருக்க... மனசு எதிலும் பதிய மறுத்து அடம்பிடிக்க... ஆறுமணிக்கெல்லாம் வீடு திரும்பிய மகனை தாட்சாயணி கூட ஆச்சர்யமாய் பார்த்தாள்.

"அட.... இது எம்புள்ள கலிங்கர் தானா?"

"என்னம்மா கிண்டல் பண்ணிகிட்டு? நல்ல தலைவலி... மாத்திரைப் போட்டுக்கிட்டு படுக்கப் போறேன்... சூடா ஒரு சுக்கு காபி மட்டும் போட்டுத் தரச் சொல்லுங்க!"

அதற்கு மேல் மகனை சீண்ட மனமின்றி... "சரிப்பா" என்றாள்.

மாத்திரைப் போட்டும் தலைவலி விட்டபாடில்லை. அவன் உள்ளம் கொதித்தது.

அவள் யாரென்றேத் தெரியாதபோது... அவளின் செய்கையால் ஈர்க்கப்பட்டு... போட்ட கணக்கு தப்பானதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவனுடைய வக்கீல் தொழிலில்... இதுவரை அவன் ஆட்களை எடை போட்டதில் ஒரு பிழையும் நேர்ந்ததில்லை. ஆனால், அவள்... இப்படியொரு ஈனப்பிறவியாய் இருப்பாள் என்பதை யூகிக்கவே இல்லையே! எவ்வளவு அழகான குழந்தைத்தனமான முகம்?

'இதுவே தொழிலா? அல்லது... சில படிக்கும் பெண்கள் ஜாலிக்காக செய்யும் அசிங்கமா? சே...'

உறக்கம் வர நடுநிசியானது கலிங்கருக்கு!

○○○

ஹாலில் மலர்க்கொடியின் போட்டோ வைக்கப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது. வாழையிலை பரப்பி அவளுக்குப் பிடித்த பலகாரமெல்லாம் படையல் போடப்பட்டிருந்தது. அவளுக்கு எட்டாவது திவசம்.

சுற்றிலும் வருத்தம் தோய்ந்த குடும்பத்தினர்கள். அம்மாவின் கண்களில் மட்டும் தாரைத் தாரையாய் கண்ணீர்.

தன் அறை வாசலில் இருந்து பார்க்கும் போது மலர்க்கொடி தன்னையே பார்ப்பது போன்ற பிரமை பைரவிக்கு.

மலர்க்கொடிக்கு பைரவியின் சாயல்!

'எல்லாம் என்னால்தானேக்கா?. நீ எல்லாரையும் விட்டுட்டுப் போய் பல வருஷமானாலும் வலியும் வடுவும் நிரந்தரமாகிப் போச்சேக்கா. அவசரப்பட்டுட்டியே!'

அவளைப் பார்த்த அத்தனை பேரும் கோபமானார்கள்.

"தண்டிக்க வேண்டிய அசிங்கமெல்லாம் உயிரோட நடமாடறப்ப... நீ ஏம்மா உயிரை விட்டே?" சீராளன் குரல் தழுதழுக்க... பைரவியைப் பார்த்து பற்களைக் கடித்தான்.

ஆளாளுக்கு தங்கள் பங்கிற்கு ஜாடைமாடையாய் திட்ட... பைரவி மொட்டை மாடிக்குச் சென்று விட்டாள்.

நிமிடங்கள் கரைந்தது.

காக்காவிற்கு சாப்பாடு வைக்க வந்த ஜெயலட்சுமி... ஒரு ஓரமாய் கால்களுக்கிடையில் முகத்தைப் புதைத்து அழுதுக் கொண்டிருந்த பைரவியைப் பார்த்து திகைத்து நின்றாள்.

சற்று நேரம் அவளையே பார்த்திருந்தவள்... வேதனையுடன் கீழே இறங்கி வந்தாள்.

○○○



6

"சாப்பிடுங்க... நாலு வாய் கூட சாப்பிடலே... வேணாம்னு அடம்பிடிச்சா எப்படி?"

ஜெயலட்சுமி மறுபடி ஸ்பூனால் ராகி கஞ்சியை புகட்ட முற்பட...

"ம்ம..." என்று மறுத்து தலையாட்டினார் சஞ்சீவி.

கழுத்தெலும்பு உடைந்து, உடம்பு செயலிழந்து... மற்றவர்களை புரிந்துக் கொள்ளுமளவு தெளிவும், வாய் திறந்து சாப்பிடுமளவு சக்தியும் இருந்ததால்... ஏழெட்டு வருடமாய் படுத்த படுக்கையாய்... உயிரோடிருக்கிறார் சஞ்சீவி.



திடஉணவு ஜீரணமாகாது என்பதால்... எல்லாமே திரவஉணவுதான்! ஒரு குழந்தையைப் போல் கணவனை பார்த்துக் கொண்டாள் ஜெயலட்சுமி.

சீராளன் அப்பாவிற்கு 'ஷேவ்' பண்ணி விடுவான். அதைத் தவிர வேறெந்த வேலையும், அவருக்கு யாரையும் செய்ய அனுமதிக்க மாட்டான். உடம்பைத் துடைப்பது முதல், தினமும் நான்கைந்து முறை மலத்தை துடைத்து சுத்தமாய் வைத்திருப்பதெல்லாம் அவன்தான் முகம் சுளிக்காமல் செய்வான். பிள்ளைகளையோ, மருமகளையோ செய்ய விட மாட்டான்.

சின்னதாய் அவர்கள் முகம் சுருக்கி விட்டால்... நோயாளிக்கு தண்டனை, அதை விட வேறேது?

○○○

"அம்மா..."

மிளகாய் பொடிக்காக, மிளகாய், தனியா, மிளகு, சீரகம் என மசாலா சாமான்களை வெயிலில் காய வைத்துக் கொண்டிருந்த ஜெயலட்சுமி நிமிர்ந்தாள்.

சீராளன்!


"என்னப்பா?"

"கொஞ்சம் பேசணும்மா!"

"சொல்லுப்பா!"

"நம்ம இருத்தியைப் பொண்ணு கேட்டு என்கிட்டயே நாலஞ்சு பேர் கேட்டுட்டாங்க!"

"ஆமாம்ப்பா... என்கிட்டயும் சிலபேர்



கேட்டாங்க... படிப்பு முடியட்டும்னு சொன்னேன்!"

"இன்னும் படிப்பு முடிய ஆறேழு மாசந்தானம்மா இருக்கு. பார்த்து நிச்சயம் பண்ணி வச்சிடலாம்!"

"அப்படீங்கறியா?"

"ஆமாம்மா! அவளுக்குன்னு இருக்கிற கொஞ்ச நகைகள் தவிர, மீதியெல்லாம் ஒரு அண்ணனா, அப்பா ஸ்தானத்துல இருந்து நான்தானே செய்யணும்? இப்ப ஆபீஸ்ல லோன் எடுத்தேனா... நாலஞ்சு வருஷத்துல அடைஞ்சிடும். அடுத்து என் பொண்ணு கருதிக்கு நான் சேர்த்து வைக்க சரியாயிருக்கும்."

மகனை பெருமிதத்துடன் பார்த்தாள் ஜெயலட்சுமி.

"அப்படியே செய்ப்பா... நீ சொல்றதுதான் சரி"

"இன்னொரு விஷயம்மா..."

"சொல்லுப்பா!"

"என்னதான் நம்ம தகுதி, குடும்ப கவுரவம், கிருத்திகாவோட அழகுன்னு வரன்கள் வந்தாலும்... வீட்லேயே ஒரு சனியனை வச்சுக்கிட்டு ஒரு நல்லது கெட்டதுன்னு பண்ண சங்கடமா... அசிங்கமா இருக்கும்மா."

"...........?!"

"இவளை எப்படியாவது வெளியே அனுப்பினாதான் கிருத்திகாவுக்கு நல்லது!"

"ச... சரி... நா... நான் என்ன செய்யட்டும்?"

"வெளியே தலைகாட்ட முடியலம்மா! வேலைக்குப் போறதா சொல்லிக்கறா! ஆனா, அவளை கண்ட எடத்துல, கண்டகண்ட ஆளுங்களோட பார்த்துட்டு வந்து சொல்லுறப்ப... தூக்குல தொங்கணும் போல இருக்கு!"

"சீ..ரா...னா?!" பதறினாள்.

"பின்னே என்னம்மா? தப்பு தப்பா காதுல விழுதே! ஏற்கனவே இந்த குடும்பத்தை சீரழிச்சது பத்தாதா? என்னவெல்லாம் நடந்துச்சு? இதுக்கு மேலயும் அவளை இந்த வீட்ல வச்சுக்கணுமா? நாளைக்கு என் பொண்ணு வளர்ந்து நிக்கறப்ப... இவளாலேயே அவ வாழ்க்கையும் பாழாகாதா?"

"என்னை... என்னப்பா பண்ணச் சொல்றே? நான்தான் அவளை ஒரேயடியா தலைமுழுகிட்டேனே?"

"தாத்தாக்கிட்டே பேசிப் பாரும்மா! அவளை இன்னும் நம்பித் தொலைக்கிறார். இந்த வீட்ல உரிமை இருக்குன்னு உயில் எழுதி வச்சதாலதானே இந்த கஷ்டம்? அதுக்கு பதில் பணமாக் குடுத்துடலாம். வட்டிக்கு வாங்கியாவது ஏற்பாடு பண்ணித் தர்றேன். அவளை அனுப்பிடலாம். என்னம்மா நான் சொல்றது?"

"ச... சரிப்பா! சந்தர்ப்பம் பார்த்து அவர்கிட்டே பேசறேன்!"

"சீக்கிரமே... பேசிடும்மா!"

○○○

தாட்சாயணி பொருமினாள். மனசு தாளவில்லை. பிரஷர் அதிகமாகி... மாத்திரை உட்கொண்டாள். கலிங்கர் அம்மாவை கவலையுடன் பார்த்தான்.

"இது ரொம்ப தப்பு கலிங்கா..."

"அம்மா கொஞ்ச நேரம் சும்மாயிருக்கியா? மாத்திரை போட்டாச்சு. கொஞ்சமாச்சும் தூங்கும்மா!"

"நெஞ்சு கொதிக்குதுப்பா! எல்லாம் பேசி முடிவான பின்னால... பொண்ணோட அப்பா இறந்துட்டார்னு சகுனம் சரியில்லேன்னு கல்யாணத்தை நிறுத்தினது கூட பெரிசில்லே... ஆனா, உன்னைப் போய்..."

"திரும்ப... திரும்ப இதையே ஏன் பேசிட்டிருக்கே? அது அவங்களோட நம்பிக்கை! நமக்கும் வேற ரூபத்துல தடை வந்திருந்தா... நீயும் அப்படித்தானே நடந்துப்பே?"

"நான் இதை பெரிய விஷயமா நினைக்கலப்பா! இது இல்லேன்னா... ஆயிரம் பொண்ணுங்க என் பிள்ளைக்காக வரிசையில நிப்பாங்க! நான் இப்பதான் தரகர் மூலமா அந்த விஷயத்தை கேள்விப்பட்டேன். நீ லீடிங் லாயர்ங்கறதால உனக்கு எந்தெந்த விஷயத்திலே கெட்ட பழக்க வழக்கங்கள்லாம் இருக்குனு சந்தேகப்பட்டு விசாரிச்சிருக்காங்க... அதை கேள்விப்பட்டதிலேர்ந்து..." கோபத்தில் முகம் செந்தணலாய் மாறியது தாட்சாயணிக்கு.

"திரும்பவும் தப்புப் பண்றேம்மா! அவங்க விசாரிச்சதிலே என்னத் தப்பு? என்னைக் கேட்டா... பொண்ணைப் பெத்தவங்களா இருக்கட்டும், பிள்ளைய பெத்தவங்களாயிருக்கட்டும். ரெண்டு தரப்பிலேயும் ஒருவர் அறியாம மத்தவங்க விசாரிக்கறது ரொம்ப சரி! பார்க்கிறேயில்லே... பத்திரிகைய திறந்தா... வெறும் டைவர்ஸ் கேஸ்! ஒரு வருஷம் கூட தாக்குப்பிடிக்க முடியல. போதாதுக்கு கள்ளக் காதலுக்காக கொலைன்னு... இப்பல்லாம் லேடீஸே ரொம்ப தைரியமா கொலைப் பண்ற அளவுக்கு துணிஞ்சிடறாங்க. இதையெல்லாம் விடும்மா... அவங்க என்னைப் பத்தி விசாரிச்சி... எந்த பிரச்சினையும் இல்லேன்னு தெரிஞ்ச பிறகுதானே.. மத்த விஷயங்களை பத்திப் பேசினாங்க?"

"அதுக்கில்லே..."

"உனக்கொரு பொண்ணு இருந்திருந்தா... நீ விசாரிச்சிருக்க மாட்டே?"

"..............?!"

"நான் என்ன சின்னப் பாப்பாவையா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்? ஏற்கனவே பிறந்து, வளர்ந்து... உன் கண்படாம ஒளிஞ்சிருக்கா! எப்பவாவது உன் முன்னாடி வரும்போது பிடிச்சு வை உன் மருமகளை... சரியா? அதுவரைக்கும் என்னையும் கொஞ்சம் ப்ரீயா விடு... வி.ஐ.பி. கேஸெல்லாம் இருக்கும்மா. கவனமா ஹாண்டில் பண்ணனும். அதுக்குத் தேவை... வீட்ல நிம்மதி..ம்?!"

மெல்லத் தலையாட்டினாள் தாட்சாயணி.

○○○

நண்பரின் வீட்டு விசேஷத்தில் கலந்துக் கொண்டு விட்டு காரை ஓட்டிக் கொண்டிருந்தான் கலிங்கர்.

இரண்டு நாட்களாய் சரியாய் உறக்கமில்லை. கார் ஓட்டும்போதே கண்கள் செருகியது.

'ப்ச்... இன்னைக்கு டினரவரை அவாய்ட் செய்தது பெரிய முட்டாள்தனம்!'

ஒரு சிக்லெட்டை எடுத்து வாயில் போட்டு மென்றபடி காரை ஓட்டினான். ரோட்டில் ட்ராபிக் அதிகமாயிருந்ததால்... சாலிகிராம குறுக்குத் தெருக்களில் புகுந்து வேகமாய் ஓட்டினான்.

அப்போது...

ஆளரவமற்ற அந்தத் தெருவில்... சற்று தூரத்தில் ஒரு பெண் ஓடிவர... அவளை நான்கைந்து பேர் விரட்டிக் கொண்டு வந்தனர்.

அதில் ஒருவன் அவள் வயிற்றில் எட்டி உதைக்க... விழுந்து, எழுந்து, தடுமாறி ஓடி வந்தவள்...

காரின் வெளிச்சம் பார்த்து கையை ஆட்டினாள்.

பதைத்துப் போன கலிங்கர் சரக்கென வண்டியை நிறுத்தி, கதவைத் திறக்க... ஏறிக் கொண்டாள்.

அந்த தடியர்களைத் தாண்டி வேகமாய் காரை செலுத்தியவன் அந்தப் பெண்ணை திரும்பிப் பார்த்து... பெரிதாய் அதிர்ந்தான்.

○○○




'இவளா?'

வியர்வையில் முகமும் கழுத்தும் நனைந்திருக்க... மூச்சு வாங்க... வலியில் முனகினாள். இளரோஸ் நிற சுரிதார்... ரத்தத்தில் நனைந்திருந்தது.

வயிற்றைப் பிடித்து முகத்தை சுருக்கியவள்...

"தாங்க்ஸ் சார்... ஆட்டோ ஸ்டாண்ட் இருக்கிற எடமா பார்த்து நிறுத்திடுங்க... நான் போய்க்கறேன்" என்றாள் பைரவி.

"என்ன ஆச்சு?"

என்றவனின் குரலில் கண்களைத் திறந்தவள் அவனைப் பார்த்து சங்கடத்தில் நெளிந்தாள்.

"நீ...ங்...க...ளா?"

"நான் கூட நீதான்னுத் தெரிஞ்சிருந்தா... காரை நிறுத்தாமப் போயிருப்பேன்!"

பைரவியின் முகம் அவன் வார்த்தையில் அடிபட்டுப் போனது.

"இ... இங்கேயே நிறுத்திக்குங்க!"

"அட... உன்னை மாதிரிப் பொண்ணுங்களுக்கு ரோஷம் கூட வருமா?" கிண்டலும், எரிச்சலுமாய் கேட்டான்.

பைரவியால் பதில் பேச முடியவில்லை. வயிற்றுவலி உயிரைக் கவ்வியது. அந்த பாதகன் எட்டி உதைத்ததில்... பதினைந்து நாட்களுக்கு பிறகு ஆக வேண்டிய மாதாந்திர பிரச்சினை உடனே ஆகிவிட்டது.

"யார் அவங்கள்லாம்? பொதுவா... நீதானே ஆம்பளைங்களை விரட்டிக்கிட்டு வருவே? அவனுங்க உன்னை விரட்டிக்கிட்டு வர்றானுங்க... அதுவும் அஞ்சு பேர்?"

"...........?!"

"என்ன தொழில் ரகசியமோ?"

"ஆமாம்..."

"பரவாயில்லையே... பளிச்சுன்னு ஒத்துக்கறே!"

"காரை நிறுத்துங்க... ப்ளீஸ்..."

"உன்னைப் பார்த்தாலே வெறுப்பாயிருக்கு. ஆனா, நான் ஒரு தாயோட வயித்துல

பொறந்தவன். என் அம்மா, பாலோட மனிதாபிமானத்தையும் சேர்த்து ஊட்டினாங்க. நான் எப்பவும் மனுஷனா நடந்துதான் பழக்கம். நீ உள்ளேயே இரு... அதோ அந்த ரெடிமேட் ஷாப்ல டிரஸ் வாங்கிட்டு வர்றேன்."

பைரவியால் மறுக்க முடியவில்லை. நிலைமை அத்தனை மோசமாய் இருந்தது.

காரை நிறுத்தினான்.

"என்ன சைஸ்?"

சொன்னாள்.

இறங்கிச் சென்றவன் பத்து நிமிடத்தில் ஒரு பார்சலோடு திரும்பி வந்தான்.

"ம்..." நீட்டினான்.

"தாங்க்ஸ்"

"பக்கத்துலதான் என் ஆபீஸ் இருக்கு. டிரஸ் சேஞ்ச் பண்ணிக்க!"

"ம்..."

அடுத்த பத்தாவது நிமிடம் அவனது அலுவலகம் வர... இறங்கி பூட்டைத் திறந்தான்.

"போ... லெஃப்ட் சைட் பாத்ரூம் இருக்கும்! நான் கார்லேயே வெய்ட் பண்றேன்!"

"ம்..."

பைரவி உள்ளேச் சென்றாள்.

விலை உயர்ந்த பர்னிச்சர்களுடன் அலுவலகம் பந்தாவாக இருந்தது.

பைரவி வெளியில் வர பதினைந்து நிமிடம் எடுத்துக் கொண்டாள்.

அவனருகே வந்தவள் நிமிர்ந்து பார்க்கவே சங்கடப்பட்டாள்.

"தாங்க்ஸ்!"

"மணி என்ன? நைட்டு பதினொண்ணு! ஒரு பொண்ணு இந்நேரத்துல நாலஞ்சு ஆம்பளைங்களால விரட்டப்பட்டு வர்றான்னா... அவளுக்கு புதுசா வேற தகுதி இருந்துடப் போறதில்லை. தயவுப் பண்ணி இனி, என் கண்லப் பட்டுடாதே! அதோ... அங்கேதான் ஆட்டோ ஸ்டாண்ட் இருக்கு... போ!"

கலிங்கரின் குரல் கடுமையாய் ஒலித்தது.

"சரிங்க!" பைரவி நிதானமாய் சொல்லிவிட்டு கையில் கவருடன்... ஆட்டோ ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள்.

செல்லும் அவளை பார்க்க... பார்க்க அருவருப்பாய் இருந்தது.

ooo

## பலவித வண்ணங்களைக் காட்டும் விசித்திர ஆடை!

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் அனொவுக் விப்ரச்ட் நவீன ஆடையொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த ஆடையில் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் ஊடாக நிறச்சாயங்கள் செலுத்தப்படுகின்றன. 'பிசியூடோமோர்ப்' என இந்த ஆடை அழைக்கப்படுகிறது.

'பிசியூடோமோர்ப்' இரண்டு பகுதிகளைக் கொண்டது. உடம்புப் பகுதி வெள்ளை நிறத்தால் ஆனது. மற்றைய பகுதி மெல்லிய குழாய்களினால் ஆனது. இந்த ஆடையின் கழுத்துப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் மூலம் நிறச் சாயங்கள் ஆடைகளுக்குச் செலுத்தப்படுகின்றன. இச்சாயங்களின் மூலம் ஆடை, பலவித நிறங்களில் தோற்றமளிக்கிறது.

நிறச்சாயங்கள் தன்னிச்சையாக ஆடைகளின் மீது செலுத்தப்படுவதால் புதுவிதமான டிசைன்களில் ஆடைகள் காணப்படுவதாக விப்ரச்ட் கூறுகிறார்.



உதவியாளர்களுடன் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தான் கலிங்கர்.

"ரோஹன்... அந்த எவிடென்ஸ் ஹின்ஸ் எல்லாம்..."

"எடுத்துக்கிட்டேன் சார்!"

அனைவரும் காரை நோக்கிப் போக... அலுவலக காவலாளி தயங்கி அவனை அழைத்தார்.

"சா..ர்!"

திரும்பினான் கலிங்கர்.

"என்ன கோபால்?"

"யாரோ ஒரு பொண்ணு... காவ்யாவாம்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வந்தாங்க!"

"வாட்?"

"உங்களுக்கு தரவேண்டிய பணம்னு குடுத்துட சொல்லி இதை குடுத்துட்டுப் போனாங்க!"

முழு ஐநூறு ரூபாய்!

புரிந்தது. நேற்றிரவு அவளுக்கு உடை வாங்கியதற்கான பணத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறாள்.

'ரோஷக்காரிதான் போல...!'

ஆனால், அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள உள்ளம் கூசியது.

"உனக்கொரு பையன் இருக்கான்ல?"

"ஆமாங்க சார்!"

"அவனுக்கு டிரஸ் வாங்கிக் குடு... வச்சுக்க!"

"தாங்க்ஸ் சார்!" பூரித்துப் போனான் கோபால்.

ooo

தன் உதவியாளனை பூந்தமல்லி ஹைரோடில் இறக்கி விட்டு, காரை எடுக்க முற்பட்ட கலிங்கர், அந்த நபரை உற்றுப் பார்த்தான்.

அருகிலிருந்த ஏ.டி.எம்.மில் இருந்து இறங்கி வந்துக் கொண்டிருந்தான் சீராளன்.

'அட...' என்று ஆச்சர்யப்பட்ட கலிங்கர் காரை ஓரமாய் நிறுத்திவிட்டு இறங்கி... அவனருகில் சென்றான்.

"ஹலோ சார் எப்படியிருக்கீங்க?"

அவனை சற்றும் எதிர்பார்த்திராத சீராளன் பெரிதாய் புன்னகைத்து தாவி அணைத்தான்.

"டேய்... கலிங்கர்... நீயா? எத்தனை வருஷமாச்சு உன்னைப் பார்த்து?"

"தொப்பை எல்லாம் போட்டிருக்கு... எத்தனை குட்டி?"

"ஒண்ணுதான்! நீ?"

"அம்மா... என் பொண்டாட்டியதான் வலைவீசி தேடிட்டிருக்காங்க!"

"நாடறிஞ்ச வக்கீலுக்கு கிடைக்காதப் பொண்ணா?"

இருவரும் சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டிருந்தனர்.

பிரசிடென்சி கல்லூரியில் இருவரும் பி.எஸ்சி. ஒரே மேஜர் எடுத்து படித்தவர்கள். பக்கத்து, பக்கத்து பெஞ்ச்! அதனால் ரொம்பவே நெருக்கம்.

படிப்பு முடிந்ததும்... நட்பில் ஒரு சின்னத் தொய்வு!

கலிங்கர் லா காலேஜில் சேர... சீராளன் அண்ணா யுனிவர்ஸிட்டியில் மேற்படிப்பைத் தொடர்ந்து வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான்.

கலிங்கர் பரபரப்பான வக்கீலானதை டி.வி.யில் அவ்வப்போது பார்த்து சந்தோஷப்படுவான்.

"வீட்டுக்கு வா சீரா... அம்மா உன்னைப் பார்த்தா சந்தோஷப்படுவாங்க!"

"கண்டிப்பா வர்றேன். இந்தா... இது என் அட்ரஸ்... உன்னைப் பத்தி அடிக்கடி வீட்ல சொல்லுவேன். என் பொண்டாட்டி கூட கிண்டல் பண்ணுவா. 'உங்க ப்ரண்டை அடிக்கடி நியூஸ் சேனல்லயாவது காட்றாங்க. உங்களை அட்லீஸ்ட் டிஸ்கவரி சேனல்லயாவது காட்றாங்களா?'ன்னு..."

"அட இதுக்காகவாவது நான் உங்க வீட்டுக்கு கண்டிப்பா வருவேன்!"

மனம் விட்டு சிரித்தனர் நண்பர்கள் இருவரும்.

ooo



"உண்மையிலேயே ரொம்ப சந்தோஷமாயிருக்கு கலிங்கர்! நீ எந்தளவு பிஸின்னு எனக்கு நல்லாத் தெரியும். ஆனா, நான் கூப்பிட்டதும் ஈகோ பார்க்காம வீடு தேடி வந்தேப் பாரு... எதிர்பார்க்கலேடா!" நெகிழ்ச்சியுடன் கூறினான் சீராளன்.

"இதிலே என்னடா ஈகோ? ஒவ்வொரு மனுஷனும் இளைப்பாறுற இடம்...

நண்பனின் இதயம்தான்டா! காலேஜோட நம்மோட ப்ரண்ட்ஷிப்ல கேப் விழுந்துடுச்சி. உன்னைப் பார்த்ததுமே பத்துவயசு குறைஞ்சுப் போச்சுத் தெரியுமா? பிஸி... டென்ஷன்னு வாழ்க்கை ஓடிக்கிட்டே இருக்குது. பட், இந்த மாதிரி மீட்டிங்கெல்லாம் நமக்கு அவசியம் மட்டுமில்லே... ஆரோக்கியமும்தான்! அம்மாகிட்டே, மனைவிக்கிட்டே, உடன்பிறப்புகள்கிட்டே பகிர்ந்துக்க முடியாத விஷயங்களை... நண்பன்கிட்டேதானே பகிர்ந்துக்க முடியும்?"

"அப்படியே... வக்கீல் மாதிரியே பேசறேடா!"

"டேய்... நான் வக்கீல்டா!"

"அட... ஆமாயில்லே?"

நண்பர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கையில் ஜெயலட்சுமி தட்டில் ஸ்வீட்டும், காரமும் கொண்டுவர, செல்வி சுடச்சுட டீ கொண்டு வந்தாள்.

உபசரணையாக இரண்டு வார்த்தைப் பேசிவிட்டு அவர்களும் அகல... இருவரும் நேரம் போவதேத் தெரியாமல் பேசிக் கொண்டிருக்க...

உள்ளே நுழைந்தாள் பைரவி.

எதேச்சையாக அவளைப் பார்த்துவிட்ட கலிங்கர்...

ஆடிப் போனான்.

'இவளா? எப்படி இங்கே?'

அவன் முகம்போனப் போக்கைப் பார்த்து சங்கடத்தில் நெளிந்தான் சீராளன்.

"உனக்கும் வயசாகுதில்லே... பொண்ணுங்களை ரொம்ப பில்டர் பண்ணாம சட்டுபுட்டுனு கல்யாணம் பண்ணிக்க! காலத்தோட கல்யாணம் பண்ணாதானே... நாம ஆரோக்கியமாயிருக்கும் போதே... புள்ளைங்களை கரையேத்த முடியும்?"

பைரவி அவர்களை நிமிர்ந்துப் பார்க்காமலேயே கதவைத் திறந்து உள்ளேச் சென்றாள்.

"வாஸ்தவம்தான்!" யோசனை எல்லாம் அவள் மீதே இருந்தது.

உள்ளே போன வேகத்தில் மறுபடி வெளியே வந்தவள், செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினாள். அப்போதும் அவர்கள் பக்கம் திரும்பவில்லை.

"அம்மா... எப்படியிருக்காங்க கலிங்கா?"

"நல்லாயிருக்காங்க! ஆமா... அந்த ரூமை வாடகைக்கு விட்டிருக்கியா என்ன?"

"இ... இல்லேப்பா!"

'சொல்லி விடலாமா அவளைப் பத்தி?'

"யாரந்தப் பொண்ணு?"

"விடுப்பா! ரொம்ப நாள் கழிச்சிப் பார்க்கறோம். நல்ல விஷயங்களை மட்டும் பேசுவோம். நல்லவங்களை பத்தி மட்டுமே பேசுவோம்!" சீராளன் முகம் எரிச்சலால் சுருங்கியது.

"யாருன்னு கேட்டதுக்கு இவ்ளோ டென்ஷன் ஆகறே!" வியப்புடன் கேட்டான்.

"அது... இந்த வீட்டு எமன்!" என்றான் கசப்பாய்.

ஓரளவு புரிந்தது கலிங்கருக்கு.

ஒரு வேளை... அவள் சீராளனின் உறவுப் பெண்ணாக இருக்கலாம். இதற்கு மேலும் அவள் யார் என்று விசாரிப்பது அநாகரீகம். இவன் சொன்ன ஒரு வார்த்தையின் மூலம் அவள் தப்பானவள் என்பது ஊர்ஜிதமாக... அவளைப் பற்றிய எண்ணங்களை துடைத்தெறிந்தான்.

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு, "கண்டிப்பா... எங்க வீட்டுக்கு வரணும். நீ மட்டுமில்லே... வீட்ல எல்லாரையும் அழைச்சிட்டு வரணும்!"

"ஷ்யூர்!"

"சரி... நான் வர்றேன்!" என்று வெளியேறி காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்ட ஒரு நிமிடத்தில் கையில் பிரட் பாக்கெட்டுடன் உள்ளே நுழைந்தாள் பைரவி.

○○○

பெரிய ஷாப்பிங் மால் அது!

நகரில்... பாரினை நினைவு படுத்திய உள்கட்டமைப்பு! உள்ளேயே ரெஸ்டாரெண்டும் இருந்தது. எந்தவகை உணவு வேண்டுமானாலும் கிடைக்கும்!

அதை ஒரு மீட்டிங் ப்ளேஸாகவே நிறையப் பேர் பயன்படுத்தினர்.

கலிங்கரை எதிர்க்கட்சி எம்.பி. தன் பர்சனல் கேஸ் விஷயமாக வரச் சொல்லியிருந்தார்.

ரிசர்வ் செய்யப்பட்டிருந்த அந்த குறிப்பிட்ட டேபிளில் தம்பித்துரை முன்னமே வந்து அமர்ந்திருந்தார்.

"ஸாரி சார்... லேட்டாய்டுச்சு!" அவரின் கை குலுக்கிவிட்டு எதிரே அமர்ந்தான்.

"இந்த ஊர் ட்ராபிக்ல மாட்டிக்கிட்டா... யாராலதான் கரெக்ட் டைமுக்கு வர முடியும்? என்ன சாப்பிடலாம்?"

"அது அப்புறம். நான் கேட்ட டீடெய்ல்



எல்லாம் எடுத்துட்டு வந்தீங்களா சார்?"

"எல்லாம் இதிலே இருக்கு கலிங்கர். அவசரப்பட்டு அவனை நம்பி ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டா என் பொண்ணு! ஆனா, அவளுக்கு இன்னும் பதினெட்டு வயசே ஆகலை. அந்த ராஸ்கல் போர்ஜரி சர்டிபிகேட் ரெடிப் பண்ணி இத்தனையும் பண்ணி இருக்கான். அவனுக்கு அடுத்து என்னால என்னென்ன பிரச்சினைகள்லாம் வரும்னு நல்லாத் தெரியும். அவனோட எய்ம்.. பணம்! பத்திரிகையிலயும், நெட்லேயும் இந்த மேட்டரை லீக் பண்ணிடுவேன். இருபதுகோடி வேணும்னு மிரட்டறான்!"

"..............?!"

"அவன் மேல கேஸ் போட்டு உள்ளே தள்றது ஈஸி. ஆனா, என் பொண்ணோட வாழ்க்கை ஸ்பாயில் ஆகிடக்கூடாது. இப்ப அவளும் அவனோட சுயரூபம் தெரிஞ்சு விலகிட்டா! வெளியே விஷயம் வராம... அவனை தண்டிக்கணும் கலிங்கர். அது உங்களால முடியும். அந்த நம்பிக்கையிலதான் இந்த பிரச்சினைய உங்ககிட்ட கொண்டு வந்தேன்!"

"கவலைப்படாதீங்க சார்! முள்ளை முள்ளால எடுக்கற மேட்டர் இது. நான் பார்த்துக்கறேன்" என்று நம்பிக்கையாய் கூறினான்.

சாப்பிட்டுக் கொண்டே மற்ற விஷயங்களை பேசிக் கொண்டிருந்தனர். கலிங்கர் மிக யதேச்சையாக பார்வையை சுழலவிட்டான். அப்போதுதான் அந்த காட்சி கண்ணில் பட்டது.

பைரவி ஒரு பெண்மணியிடம் சீரியஸாய் எதையோ சொல்லிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்மணி ஹெவி மேக்கப்புடன், ஸ்லீவ்லெஸ் ப்ளவுஸ் அணிந்து, கறுப்பு நிற ஷிஃபான் புடவையில் படு செக்ஸியாய் இருந்தாள். பைரவி கையில் ஒரு கவர் இருந்தது. அதை அந்தப் பெண்மணியிடம் கொடுத்தாள். அவள் பேசப் பேச அந்தப் பெண்மணியின் முகம் பிரகாசமானது. சற்று நேரத்தில் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்று விட்டாள் பைரவி.

கலிங்கருக்கு அதை புரிந்துக் கொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை. அந்தப் பெண்மணியின் மூலம் வேறு எவனுடனோ நேரம் செலவழிக்க வாய்ப்பு கிடைத்திருக்கும்.

அவளைப் பார்த்ததும் அதுவரை உற்சாகமாயிருந்த அவனின் மனநிலை முற்றிலும் மாறிப் போயிற்று.

○○○

தாட்சாயணியின் முகம் என்றும் இல்லாத அளவு தாமரை இலையாய் சந்தோஷத்தில் அகன்றிருந்தது.

குளித்து விட்டு படுக்கைக்குப் போக... பாலுடன் அறைக்குள் வந்த அம்மாவின் முகம் பார்த்து கலிங்கருக்கும் மகிழ்ச்சியாயிருந்தது.

"என்னம்மா ரொம்ப ஹாப்பியா இருக்கேப் போல... என்ன... உன்னோட தாறுமாறான சுகர் கண்ட்ரோலுக்கு வந்துடுச்சா?"

"இதெல்லாம் பெரிய விஷயமா? அதை விட பெரிய செய்தி இருக்கு!"

"என்னம்மா விஷயம்?"

"அட்வகேட் ராஜகணபதி தெரியுமில்லே?"

"தெரியாம என்ன? எவ்ளோ பெரிய ஆளு? அவர்கிட்டே பிராக்டிஸ் பண்றதுக்கு ஏகப்பட்ட போட்டியாச்சே!"

"அவரோட பொண்ணு சன்மதியைத் தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கேம்மா! அவங்களும் லாயர்தானே? பீல்டுல நல்லப் பேரு இருக்கு!"

"அதான்ப்பா... ராஜகணபதி காலைல போன்ல என்கிட்ட பேசினார்."

"உன்கிட்டயா... ஏம்மா?" புரியாமல் பார்த்தான்.

"உன்னைப் பத்தி அவருக்கு நல்லாத் தெரியுமாம்... அவரோட பொண்ணை உனக்கு கல்யாணம் பண்ணி... வைக்க.."

"அம்மா!" மேற்கொண்டு பேச விடாமல் கை நீட்டி தடுத்தாள்.

"அந்தப் பொண்ணு வேணாம்மா!"

"..................?!"

○○○




"என்னப்பா சொல்றே? அந்தப் பொண்ணு உன்னைப் போலவே லாயர். உனக்கேத்த பொண்ணு!"

"ஆனா, உனக்கேத்த மருமக இல்லேம்மா!"

"..................?"

"என்னால உன்கூட டைம் ஸ்பெண்ட் பண்ண முடியல... காரணம் என் தொழில்! உன் மருமகளையும் அதே மாதிரி செலக்ட் பண்ணா கடைசி வரைக்கும்

நீ தனிமையிலதான் இருக்கணும். இதோப் பாரும்மா... எனக்கு வேலைக்கு போறப் பொண்ணா பார்க்காதீங்கம்மா! உனக்கேத்தப் பொண்ணா... உன்னை தன் அம்மா மாதிரி பார்த்துக்கற பொண்ணாப் பாரு.... சரியா?"

தாட்சாயணிக்கு அவன் சொல்வது நியாயமெனப் பட்டது.

'சரி'யென தலையாட்டினாள்.

"அ... இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேன் பாரேன்..."

"என்ன... வேறொரு டாக்டர் பொண்ணு பார்த்திருக்கியா?"

"அட... இல்லப்பா. அடுத்த வாரம் சித்தியும் திருபமாவும் பெங்களூரில் இருந்து வர்றாங்க...!"

"நிஜமாவாச் சொல்றே? வந்தா... நம்ம வீட்லதான் தங்கணும்னு சொல்லிடு."

"சொல்லிட்டேன்ப்பா! தவிர, நம்ம திருபமாவுக்கு இங்கே ஒரு வரன் தகையற மாதிரி இருக்காம். அதைப் பேசி முடிக்கணும்னுதான் வர்றாங்க!"

"பாரேன்... இதைப்பத்தி திருபமா என்கிட்டே ஒரு வார்த்தைக் கூட சொல்லலே... வரட்டும்... வரட்டும்!"

"சின்னப் பொண்ணு... இதையெல்லாமா அண்ணன்கிட்டே சொல்லிட்டிருப்பா... வெக்கப்பட்டிருப்பா!"

"யாரு... அவளுக்கு? வெக்கம்? போம்மா... அதெல்லாம போன ஜெனரேஷன் பொண்ணுங்களோட காணாமப் போச்சு! சரி... சித்தப்பா எப்ப வருவாராம்?"

"இப்போதைக்கு இல்லே!"

"ஏன்?"

"சட்டுனு கிளம்பி வர்ற மாதிரியா வேலை பார்க்கறாரு? கட்டுனா, ஒரு ஆர்மிக்காரனைத்தான் கட்டுவேன்னு ஒத்தைக்காலில நின்னா என் தங்கச்சி. எங்கப்பாவும் தேடிப்பிடிச்சு அவரை கல்யாணம் பண்ணி வச்சாங்க. இப்ப? ரெண்டு மூணு வருஷத்துக்கு ஒரு முறைதான் குடும்பத்தை பார்க்க அனுப்பறாங்க. பாவம் இப்பக்கூட வர்றதுக்கான எல்லா முயற்சியும் பண்ணியிருந்தாராம். இந்த அயோத்தி தீர்ப்புக்காக... பாதுகாப்புக்கு இவரை பாபர் மசூதியில நிக்க வச்சிட்டாங்க... ஆறு மாசத்துக்கு இங்கே எட்டிப் பார்க்க முடியாதாம்!"

"பாவம் சித்தப்பா!"

○○○

கண்களைத் திறக்கக் கூட விடாமல் உடல் சூடு படுத்தியது.

யாராவது தலையைத் தூக்கி மடியில் வைத்து, நெற்றியை அழுத்தி விட மாட்டாங்களா என்றிருந்தது. வெதுவெதுப்பாய் நீர் அருந்த வேண்டும் போலிருந்தது.

பைரவியின் உடல் கொதியாய் கொதித்தது. சிரமப்பட்டு எழுந்தமர்ந்தாள். அறை மூலையில் பிளாஸ்டிக் குடத்தில் தண்ணீர் இருந்தது. மற்றபடி அந்த ஒற்றை அறையில் துணிமணியைத் தவிர... வேறு எந்தப் பொருளும் இல்லை.

பைரவியின் மூணுவேளை உணவும், பிரட் அல்லது ஓட்டல் சாப்பாடுதான். கடுதண்ணீர் வைக்க ஒரு ஸ்டவ் கூட இல்லை.



## உலக குள்ள மனிதனின் அதிசய ஆசை!

உலகின் குள்ள மனிதர் கஜேந்திரா. 18 வயதான இவரது உயரம் எவ்வளவு தெரியுமா? 25.8 அங்குலம். நேபாளத்தைச் சேர்ந்த பழ வியாபாரி ஒருவரின் மகன் இவர். கின்னஸ் உலக சாதனைப் பதிவாளர்கள் சமீபத்தில்தான் கஜேந்திராவை உலகின் மிகவும் குள்ள மனிதராக அங்கீகரித்து சான்றிதழ் வழங்கினர்.

கடந்த மாதம் நியூயார்க் மற்றும் லண்டன் ஆகிய நகரங்களில் சுற்றுப்பயணம் செய்த கஜேந்திரா இன்னும் இரண்டு வருடங்களில் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். மனைவியின் கைப்பையில் அமர்ந்தவாறு உலகத்தைச் சுற்றிவர ஆசைப்படுகிறேன் என்றும் இவர் கூறி உள்ளார்.

கஜேந்திரா பிறக்கும்போதே உள்ளங்கை அளவில்தான் இருந்ததாகவும், அவரை பராமரிக்க மிகவும் சிரமப்பட்டதாகவும் கூறும் இவரது தந்தை ரூப் பகதூர் தபா மாகர், 18 வயதில் இந்த அளவுக்கு தனது மகன் உலகப் புகழ் பெறுவான் என்று எதிர்பார்க்கவில்லை என்று பெருமைப்படுகிறார்.

உலக அதிசயங்கள் எதுவுமே பார்ப்பதற்கு அதிசயம்தான். இதில் அதிசயம் என்ன இருக்கிறது?



செல்போனை எடுத்தாள். பெயர் பார்த்து அழுத்தினாள்.

"காய்ச்சல் அதிகமாயிருக்கு... இன்னைக்கு என்னால வர முடியாது சார்..." என்று பேசி விட்டு வைத்தாள்.

குடத்திலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துப் பருகினாள். குளோரின் வாசனை குமட்டிக் கொண்டு வந்தது.

வாயை கையால் பொத்திக் கொண்டு வெளியே ஓடி வந்தவள்... பாத்ரூமில் வாந்தி எடுத்தாள்.

அவள் வாந்தி எடுக்கும் சத்தத்தைக் கேட்டு ஜெயலட்சுமி, சிராளன், செல்வி, கிருத்திகா... எல்லோரும் வெளியே வந்தனர்.

சிராளனின் முகம் கோபத்தில் கொதித்தது.

"சீ... சனியன்!" என்றான்.

"கன்றாவி... எங்கே போய் முட்டிக்கறது! வயசுப் பொண்ணு இருக்கிற வீட்ல இந்த கூத்தெல்லாம் நடக்குது... இதை வேற நின்னு பார்த்துகிட்டிருக்கீங்க... உள்ளே வாங்க!" புருஷனின் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள் செல்வி.

ஜெயலட்சுமியும் எதுவும் புரியாமல் அவர்கள் பின்னே செல்ல... கிருத்திகா பைரவியை முறைத்தபடி சென்றாள்.

பைரவிக்கு கண்களை செருகிறது. சுவற்றில் சாய்ந்துக் கொண்டாள்.

"எங்கே தாத்தா? அவளைத் தலைமேல தூக்கி வச்சிட்டு ஆடறாரே... இந்த கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்காம எங்கே போய்ட்டார்?"

"கோவிலுக்குப் போயிருக்கார்ண்ணா!"

"இதை குடும்பம் நடத்தற வீடா நினைக்கிறாளா, வேற என்னவோன்னு நினைக்கிறாளா? பார்த்தியாம்மா அவளோட கேடுகெட்ட தனத்தை? கண்டவனோட சுத்திட்டு... வயித்துல பிள்ளைய வாங்கிட்டு வந்து வாந்தி எடுக்கிறா... அசிங்கமாயிருக்கும்மா!"

ஜெயலட்சுமி பதறிப் போனாள்.

"இல்லேப்பா... அப்படியெல்லாம் இருக்காது. அவ முகமெல்லாம் சிவந்து போயிருக்கு. உடம்பு சரியில்லாமதான் வாந்தி எடுக்கிறா...!" என்று சொல்ல வாய் துடித்தது.

ஆனால், சொல்ல முடியவில்லை. சொல்லவும் பிடிக்கவில்லை.

"நாளைக்கு கிருத்திகாவைப் பொண்ணு பார்க்க வர்றாங்க. அவங்க எதிரே இவ இப்படியெல்லாம் வாந்தி எடுத்துட்டு இருந்தா... என்னாகும்? கழுத்துல தாலி இல்லே. கல்யாணமாகாம ஒருத்தி வாந்தி எடுத்தா சந்தேகப்பட்டு கேட்க மாட்டாங்களா? தப்பித் தவறி யாராவது அதைப் பத்திக் கேட்டாலும், குழந்தைக்கு அப்பன்னு யாரைச் சொல்லுவா? ஒரு நாளாவது வீட்டுக்கு விலக்கேத்ததுக்கு முந்தி வந்திருப்பாளா? என் தம்பிக் கூட போனவாரம் இவளை ஒரு ஆணோட பார்த்தானாம். சிரிச்சு சிரிச்சு பேசிக்கிட்டிருந்தாளாம்... நாக்கைப் புடுங்கிக்கணும் போலிருக்கு!" செல்வி வெறுப்பும், எகத்தாளமுமாய் பேசினாள்.

ஜெயலட்சுமி... அங்கிருந்து சென்று விட்டாள்.

○○○

அன்று முழுக்க பைரவி வீட்டை விட்டு வெளியில் செல்லவில்லை.

தண்ணீர் பிடிப்பது போல்... அவள் அறையை நோட்டம் விட்டாள் அம்மா.

போர்வையை போர்த்திக் கொண்டு சுருண்டுப் படுத்திருந்தாள் பைரவி.

'என்னாச்சு? உடம்புக்கு முடியலியா? இல்லை... இவர்கள் சொல்வதுபோல் மசக்கை வாந்தியா? ஐயோ...கடவுளே... இதற்கு மேலும் பிரச்சினையை தாங்கிக் கொள்ள திராணியில்லை. எங்களைக் காப்பாற்று. அடுத்தவள்... வாழ்க்கையை எதிர்நோக்கி காத்திருக்கிறாள்... அவளைக் காப்பாற்று!' அப்போதும் அந்த தாய் மனசு சுயநலமாய் மற்றொரு மகளுக்காக வேண்டிக்

கொண்டது.

ооо

சஞ்சீவி இருமிக் கொண்டே இருந்ததில் மூச்சிரைத்தது. பக்கத்திலேயே அமர்ந்து அவர் நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டிருந்தாள் ஜெயலட்சுமி. விக்ஸ் தைலத்தை எடுத்து நெஞ்சுக்கும் மூக்கிற்கும் தடவிக் கொடுத்தாள்.

சற்று நேரத்தில் சுவாசம் சீராகி தூங்க ஆரம்பித்தார்.

பாலுக்கு உறை ஊற்ற மறந்துப் போனது ஞாபகத்திற்கு வர... எழுந்து சமையலறைக்கு வந்தாள்.

அங்கே.... மாமனார் கையில் பால் தம்ளருடன் யாராவது பார்க்கிறார்களா என்று உஷாராய் கவனித்தபடி பைரவியின் அறைநோக்கிச் சென்றுக் கொண்டிருப்பதை பார்த்தவள்... வந்த வழியே திரும்பிச் சென்றாள்.

ооо




யாரோ அறைக் கதவை தட்டும் சப்தம் கேட்டு கண் விழித்தவளின் அனல் இன்னும் குறையவில்லை. அதற்கு பின்தான் உறைத்தது.

இந்த அறையில் வந்து அடைக்கலமாகி இத்தனை வருடங்களில்... இதுவரை இந்தக் கதவை யாரும் தட்டியதே இல்லை. யாருக்கும் இந்த வீட்டு முகவரியை கொடுத்ததும் இல்லை. அப்படியானால் யார் கதவை தட்டுவது?

வியப்புடன் போர்வை உதறி எழுந்து வந்தவளின் விழிகளில் மகிழ்ச்சி.

அண்ணன் மகள் சுருதி நின்றிருந்தாள்.

"சு..ரு..தி...!" அவள் கன்னத்தைத் தொட.... குனிந்தாள்.

பட்டென திரும்பிப் பார்த்து... சட்டென விலகி நின்றாள் சுருதி.

எதிர்ப்புறம் செல்வியும், கிருத்திகாவும் நின்றிருந்தனர்.

"உங்களை இன்னைக்கு வீட்ல இருக்க வேண்டாம்னு சொல்லச் சொன்னாங்க. பதினோரு மணிக்கு கிருத்தி அத்தையப் பொண்ணுப் பார்க்க வர்றாங்களாம்..." சொல்லி விட்டு ஒரே ஓட்டமாய் ஓடிப் போனாள்.

தளர்ந்துப் போய் ஏறிட்டாள்.

நின்றிருந்த இரண்டுத் தலைகளும் மாயமாகின.

பைரவியின் கண்கள் தளும்பின.

நிற்கக்கூட முடியவில்லை. உணவின்றி வெறும் மாத்திரைகளைப் போட்டதில் வயிறு கபகபவென எரிந்தது.

எல்லாவற்றையும் மீறி ஒரே ஒரு சந்தோஷம். 'கிருத்திகாவிற்கு திருமணம் ஆகப் போகிறதே!'

நேரம் ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. பச்சைத் தண்ணீரில் குளிக்குமளவு உடல்நிலை இல்லை.

தளர்வுடன் நடந்து வந்து முகத்தை கழுவிக் கொண்டு, உடை மாற்றி, அறையை பூட்டிக் கொண்டு கிளம்பிச் சென்றாள்.

ஜெயலட்சுமிக்கு அவளைப் பார்க்க வயிற்றை பிசையவே செய்தது. ஆனால், கணவரின் நிலைமை நினைவுக்கு வர... மனசுக் கல்லானது.

மாமனார் பூஜை ஏதும் செய்யாமல் ஈஸிசேரில் முடங்கியிருப்பதுக் கண்டு துணுக்குற்றாள்.

"மாமா..."

"..........?!"

"மாமா..."

"ம்..."

"உடம்புக்கு ஏதும்..."

"எனக்கென்ன கேடு? நல்லாதானே இருக்கேன்?"

"அதுக்கில்லே மாமா! பூஜைக்கு எல்லாம் ரெடியா எடுத்து வச்சிட்டேன். ஆனா, பூஜைப் பண்ணாம இப்படி...?"

"பூஜைப் பண்ணி? என்னப் புண்ணியம்? இவ்வளவுதான்னு இல்லாம... மேலும் மேலும் ஒரு ஜீவனை குத்தி குதறிட்டு இருக்கீங்களே... இந்த பாவத்துக்கு எப்படி பரிகாரம் செய்யப்போறீங்க? எந்திரிச்சி நிற்கக்கூட முடியல அவளுக்கு? உன் சின்னப் பொண்ணை பொண்ணு பார்க்க வராங்கன்னு விரட்டியடிச்சிட்டீங்க. இதெல்லாம் அக்கிரமம் இல்லையா? நடக்க முடியாம நடந்துப் போன அந்த கொழுந்தை முகம்தான் மனசை பிசையுது. இந்த நேரத்திலே அம்பாளையோ, பெருமாளையோ உசத்திப் பாட மனசில்லே எனக்கு... போ... உங்க சந்தோஷத்தை சொல்லி பூஜைப் பண்ணிக்க... போ!" வெறுப்புடன் கண்களை மூடிக் கொண்டார் சங்கரபாண்டியன்.

ஜெயலட்சுமி மவுனத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

ооо



அன்று!

அப்பாவின் இருமல் சப்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது. அவர் இருந்தது உட்புற அறையில். இருக்க... இருக்க இருமலுடன் இரைப்பும் சேர்ந்தொலிக்க... மூச்சு விட அவஸ்தைப்படுவது புரிந்தது.

வெளியில் செல்ல தயாராய் இருந்த பைரவி சங்கடத்துடன் எட்டிப் பார்த்தாள்.

'இவ்வளவு நேரமாய் இருமறார். யாருமில்லையா?'

வீடு காலியாக இருந்தது.

செல்வி...சுருதியுடன் பீஸ் கட்ட பள்ளிக்குச் சென்று விட்டிருந்தாள். கிருத்திகாவும் கல்லூரிக்குச் சென்று விட்டாள்.

சங்கரபாண்டியன் நண்பர் வீட்டிற்கும், ஜெயலட்சுமி மார்க்கெட்டிற்கும் சென்றிருக்க... சீராளன் குளித்துக் கொண்டிருப்பதை கவனிக்கவில்லை.

ஒரு வித உந்துதலோடு எதிர்ப்புறம் நடந்தாள். அப்பாவின் மூச்சுத்திணறல் அதிகமாயிருப்பதை இரைப்பது உணர்த்த... அவசரமாய் உள்ளே ஓடினாள்.

கிட்டத்தட்ட ஆறேழு வருடங்கள் கழித்து தன்னைப் பெற்றவரை பார்த்ததில்... கண்கள் கரகரவென சுரந்தது.

வாயைத் திறந்து... திறந்து மூச்சு விட்டார்.

அவரின் சிரமமும், ஆபத்தும் புரிய சட்டென செயல்பட்டாள்.

டம்ளரில் தண்ணீர் ஊற்றி அவரருகே சென்றாள்.

"அப்பா... அப்பா... நான் பிடிச்சுக்கறேன். கொஞ்சம் தலைய உயர்த்தி... தண்ணிக் குடிங்கப்பா..."

அவரைத் தொட்டு தலையை தூக்க முற்பட.... ஈனஸ்வரத்தில் அலறினார் சஞ்சீவி. அவளைப் பார்த்து டென்ஷனாகி, கண்கள் கோபத்தில் விரிய... பயங்கரமாய் கத்த...

வாசலில் ஏதோ கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

அப்பாவின் குரல், குளித்து விட்டு பாத்ரூமை விட்டு வெளியே வந்த சீராளன் காதில் விழ... பதறி... அறையை நோக்கி ஓடினான்.

அங்கே பைரவி நிற்பதைப் பார்த்து ஆக்ரோஷமாக, பைரவியோ பயத்தில் வெடவெடத்தாள்.

"எவ்வளவு நெஞ்சழுத்தமிருந்தா... இந்த ரூம் வரைக்கும் வருவே? சீ... சனியனே போ... வெளியே..." அவள் முடியைக் கொத்தாய் பற்றி தரதரவென இழுத்து வந்தவன்... வெளியே தள்ளி விட்டான்.

சரியாய்... அப்போது கலிங்கர் வர... யாரென்று நிமிர்ந்துக் கூட பார்க்க அவமானமாய் இருக்க... அடிபட்ட கையுடன் எழுந்தோடினாள்.

அந்தக் காட்சி... கலிங்கரை ஒரு புரட்டு புரட்டியது.

சீராளனும் அந்த சூழ்நிலையை எதிர்பார்க்கவில்லை.

"வா... கலிங்கர்...உள்ளே வா! இதோ... ரெண்டே நிமிஷத்துல ரெடியாயிடுறேன்" என்றான்.

"ம்..."

பைரவி... கதவை பூட்டிக் கொண்டு வேகமாய் வெளியேறிவிட்டாள்.

'ஒரு பெண் இத்தனை பேர் வெறுக்குமளவிற்கு நடந்துக் கொள்ள முடியுமா?'

ஆச்சர்யப்பட்டான்.

ஒரு வி.ஐ.பி.யின் உதவி சீராளனுக்குத் தேவைப்பட்டது. அந்தப் பிரமுகர் கலிங்கரின் நண்பர் என்பதால்... அவனை அறிமுகப்படுத்தி வைக்க அழைத்துச் செல்வதாக... முன்பே திட்டமிட்ட விஷயம்.

"கிளம்பலாமா கலிங்கர். ஸாரிப்பா... ஒரு டீ போட்டுத் தரக் கூட வேலைஸ் யாருமில்லே இப்ப" என்றபடி அவர்கள் வெளியில் சென்றிருப்பதன் காரணத்தைக் கூறினான்.

"அம்மா... எப்ப வருவாங்க?"

"வர்ற நேரம்தான்!"

"அப்ப... அவங்க வர்றவரைக்கும் வெயிட் பண்ணலாம்..."

"ஏம்ப்பா?"

"நான் உள்ளே நுழையும்போதே... இருமல் சத்தம் கேட்டது... யாரு?"

"அப்பா!"

"உடம்பு சரியில்லையா?"

"அ...ஆமாம்!"

"அம்மா வந்த பிறகேப் போவோம்... அவரை மட்டும் தனியா விட்டுப் போறது சரியில்லையே...!"

"ஆமா கலிங்கர்... அவசரத்துல அதை யோசிக்கலே பார்!"

"இப்ப தள்ளி விட்டியே... அவதான் உன் தங்கச்சியா?"

"தங்கச்சின்னு சொல்லாதே... அவ என் ஜென்ம விரோதி!"

"ஏன் இவ்ளோ ஆவேசமாப் பேசறே?"

"அந்தளவு என் குடும்பத்தையே குலைச்சிட்டா..." என்றபடி அவளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

○○○




"பைரவி... சின்ன வயசிலேர்ந்தே... ரொம்ப தைரியசாலி... விளையாட்டு புத்தி!"

"பைரவியா? அது யார்?"

"இந்த வீட்டு எமன் பேர்தான் பைரவி!"

கலிங்கருக்கு இது அடுத்த ஷாக்.

'என்னிடம் அவள் காவ்யான்னு சொன்னாளே? சே... பேர்ல கூட பித்தலாட்டமா?'

"அவளுக்கு படிப்புல அவ்வளவா ஆர்வமில்லே! ஆவரேஜ் ஸ்டூடண்ட்டாதான் இருந்தா. அதனாலேயே அவகிட்டே கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டா நடந்துக்க ஆரம்பிச்சோம். ஆனா, படிக்கறதுக்கு பதிலா, புத்தி வேறசைடுல போய்டுச்சு. பதினாறு வயசுல... எவனோ ஒரு தறுதலையோட ஓடிப்போய்ட்டா! அந்த நேரத்திலதான் என் பெரிய தங்கை மலர்க்கொடிக்கு வரன் முடிவாகி சிம்பிளா நிச்சயதார்த்தமும் பண்ணியிருந்தோம். அவளோட அழகுக்காகவும், எங்களோட குடும்ப கவுரவத்துக்காகவும் பாரம்பரியமான ஒரு பணக்கார குடும்பம் தேடிவந்து சம்பந்தம் பேசியிருந்தாங்க. இந்த விஷயம்





தெரிஞ்சு சம்பந்தம் வேணாம்னு கைய கழுவிட்டாங்க. அந்த வருத்தத்துல அப்பா, எல்லாம் பைரவியாலதானேன்னு தூக்குலத் தொங்கிட்டார். 'கடைசி விநாடியில அவரைக் காப்பாத்திட்டோம். ஆனா, கழுத்தெலும்பு உடைஞ்சு, மூளையில நரம்பு பாதிக்கப்பட்டு... பேச்சில்லாம, கைகால் அசைக்க முடியாம அன்னையிலேர்ந்து படுத்த படுக்கையா ஆகிட்டார். கல்யாணம் நின்ன அதிர்ச்சியில இருந்த மலர்க்கொடி தீக்குளிச்சிட்டா. கரிக்கட்டையா... மூணுநாள் உயிருக்கு போராடி போய் சேர்ந்துட்டா. கெட்டு சீரழிஞ்சு வந்தவளை ஏத்துக்க யாருக்கும் உடன்பாடில்லை. தாத்தாதான் அவளை சேர்த்துகிட்டார். ஒரே வீட்ல இருந்தாலும் எதுக்காகவும் எங்களோட சேர்த்துக்கலே. அவ இப்பகூட தப்பான சகவாசத்தோடதான் இருக்கா. என்னென்னமோ காதில விழுது. என் குடும்ப கவுரவத்தையே நாறடிச்சிட்டிருக்கா! இவளை என்னப் பண்ணாத் தகும்? நீயே சொல்லு?!'' குரல் உடைந்துப் போயிருந்தது சீராளனுக்கு.

அவன் தோளை தட்டிக் கொடுத்தவனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

"சரி... விடு... உன் மூடை ஸ்பாயில் பண்ணிட்டேன். மேற்கொண்டு இதைப் பேச வேண்டாம் கார்ல வெயிட் பண்றேன்.. வா!" என்றபடி காரில் வந்தமர்ந்துக் கொண்டான்.

கலிங்கருக்கு குழப்பமாய் இருந்தது.

சின்ன வயசில், அறியாப் பெண்ணாய் அவள் செய்தது மன்னிக்கவே முடியாதக் குற்றமல்ல. அதற்காக தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கொண்ட அப்பாவையோ,





இலகாவையோ கோபப்படாமல் இருக்க முடியவில்லை. ஆனால், தன்னை திருத்திக் கொள்ளாமல் மேலும் மேலும் தவறுகளை செய்துக் கொண்டிருக்கிற பைரவியை நடுரோட்டில் நிற்க வைத்து சாட்டையால் அடிக்க வேண்டும் போல் ஆவேசம் எழுந்தது.

○○○

அதற்கடுத்து வந்த நாட்களில் கலிங்கர் தொழிலில் மூழ்கிப் போகிறான்.

பைரவி என்ற பெண்ணை முற்றிலுமாய் மறந்தும் போனான்.

கலிங்கருக்கு எப்போதாவது அத்திப் பூத்தாற்போல் நேரம் கிடைக்கும். அப்போதெல்லாம்... பீச்சில் ஜாகிங் சென்று விடுவான்.

அன்றும் அப்படி, தொடையை கவ்விப் பிடித்த ஷார்ட்ஸும், பரந்த தோள்களையும் விரிந்த மார்பையும் வெளிச்சம் போட்டுக் காட்டிய டிஷர்ட்டும் அணிந்துக் கொண்டு, உழைப்பாளர் சிலையிலிருந்து காந்தி சிலை நோக்கி ஓடினான்.

சூரியன் உக்கிரம் குறைந்து, அம்மாவின் சாந்துப் பொட்டாய், சாந்தமாய் மேற்கே இறங்க முற்பட்டது.

கடற்கரை பிஸியாய் இருந்தது. மக்கள் இப்போதெல்லாம்... உடல்நலனில் அதிக அக்கறை செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். நடப்பவர்களும், ஓடுபவர்களும் அதிகமாகி விட்டார்கள்.

காதலர்கள் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் அணைத்துக் கொண்டு, சிணுங்கிக் கொண்டு நடந்தனர்.

ஒரு பக்கம் வயதான ஆண் பெண்கள் வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தனர்.

'இதில் பல பேர்... வீட்டில் சிரிக்கவே வாய்ப்பில்லாத... தோழமை இல்லாத பாவப்பட்டவர்கள்' என்று பரிதாபப்பட்டான் கலிங்கர்.

'அம்மாவும் இப்படித்தானே பேச, சிரிக்க ஆளில்லாமல் அவஸ்தைப்படுகிறாள்?'

சிந்தித்தபடியே ஓடியவனுக்கு வித்தியாசம் புலப்பட்டது.

அங்கிருந்தவர்கள் அத்தனைப் பேரும் வயதானவர்கள்தான். ஆனால், அதில் ஒரு இளம்பெண்ணும் அமர்ந்து வாய்விட்டு சிரிக்க முயற்சித்துக் கொண்டிருக்க, வியப்புடன் கூர்ந்து கவனித்தான்.

சின்ன அதிர்ச்சி!

அவள்... பைரவி!

○○○

வீட்டில் நுழைந்தவனை சித்தி சுகன்யாதான் வரவேற்றாள்.

"வாப்பா... வக்கீலு... நீயும், உன் கோர்ட்டும் நலமா?"

"ஹை... சித்தி... எப்ப வந்தீங்க?" மகிழ்ச்சியுடன் அவளை கட்டிப்பிடித்துக் கொண்டான்.

"இங்கே வந்து, லஞ்ச் சாப்பிட்டு, குட்டித் தூக்கம் போட்டுட்டு, டீ சாப்பிட்டுட்டு, இதோ டின்னர் உன்னோட சேர்ந்து சாப்பிடலாம்னு வெய்ட் பண்ணிட்டிருக்கிற அளவுக்கு பன்னிரெண்டு மணிக்கே வந்தாச்சு!"

"ஒரு போனாவது பண்ணி சொல்லியிருக்கலாமே... கொஞ்சம் சீக்கிரமாவது வந்திருப்பேனே?"

"எதுக்கு? நாங்க உடனே கிளம்பற மாதிரியெல்லாம் ஐடியா இல்லேப்பா! நிருபமாவுக்கு இங்கே ஒரு நல்லகாரியம் பண்ணிட்டுதான் கிளம்புவோம். அப்ஜெக்‌ஷன் இல்லையே?!"

"இப்படியெல்லாம் பேசலாமா என்கிட்ட? இது நம்ம வீடு சித்தி! ஆமா எங்கே அந்த குட்டிப் பிசாசு?"

"இதோ... உன் முதுகுல ஓங்கி குத்துவேனாம்!" என்றபடி அவன் முதுகில் குத்தினாள் நிருபமா.

"ஏய்..."

"நான் குட்டிப்பிசாசா? ம்... நானா?"

அவளை ஏற இறங்கப் பார்த்தவன், "ஸாரி..." என்றான்.

"அப்படி..." என்றாள் ஸ்டைலாய்.

"ரத்தக்காட்டேரி!"

"என்ன?"

"பின்னே... இம்மாம் பெரிய உருவமா வளர்ந்து என்னை அடிக்கிறேன்னா... குட்டிப் பிசாசுன்னா சொல்ல முடியும்?"

அன்று முழுக்க, விளையாட்டும் சீண்டலும் கிண்டலுமாய் களைய... அந்த வீடு களைக்கட்டத் தொடங்கியது.

டின்னர் சாப்பிடும்போது நிருபமாவின் திருமண விஷயம் பற்றி பேசினாள் சித்தி.

"நல்லக் குடும்பம்... பையன் ஏர்போர்ட்ல மெக்கானிக்கல் என்ஜினியர். இவளும், அவனும் சாட் பண்ணி பழகி, நேர்ல பார்த்து... லவ் பண்ணியிருக்காங்க..."

"மேடத்துக்கு எத்தனை அரியர்?"

"ரெண்டுதாண்ணா..."



"அதானேப் பார்த்தேன்! ஒழுங்கா பாஸ் பண்ணிட்டு லவ் பண்ணியிருக்கலாமே நிரு படிப்பும் முக்கியம்தானே?"

"ஐயோ... அண்ணா... உனக்கு இருபத்தொம்பது வயசுதானே ஆகுது? அப்புறம் ஏன் கிழவன் மாதிரி அட்வைஸ் பண்றே? என்னைப் பார்த்தாவது லவ் பண்ணக் கத்துக்க... பெரியம்மா கவலைப்படறாங்க..."

"ஏய் ஓவரா... பெரியவங்க முன்னாடி இப்படியெல்லாமா பேசறது?"

நிருபமா கிண்டலாய் முகம் சுளித்தாள்.

"ஐயய்யே... என்ன பெரியம்மா உன் வளர்ப்பு? உருவத்துக்கு ஏத்தமாதிரி பேச்சில்லையே? அண்ணா... நீ இன்னும் பூத்துதானே?" கலாய்த்தாள்.

அந்த இடமே சிரிப்பால் நிறைந்தது.

○○○

மறுநாள் பகல்!

அவர்களுக்காக சீக்கிரமே வந்து விட்டான். மாடியில் சித்தியுடன் நிருபமா திருமண விஷயம் குறித்து பேசிக் கொண்டிருந்தாள்.

அதன்பின் கீழே தன் அலுவலக அறையில் சட்டப் புத்தகம் எடுப்பதற்காக படியிறங்கி வந்த கலிங்கர், ஹாலில் டைனிங் டேபிள் முன் நிருபமாவும், பைரவியும் அமர்ந்து, சிரித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்க... கோபமாய் மேலேயேச் சென்று விட்டான்.

அரைமணிநேரம் கடந்தபின் மேலேறி வந்த நிருபமாவை அழைத்தான்.

"நிரு... இங்கே வா!"

○○○



"என்னண்ணா?"

"யாரது?"

"ஓ... நீயும் பார்த்தியாண்ணா? எத்தனை வருஷம் கழிச்சி பார்க்கறோம் தெரியுமா? அவ என் பெஸ்ட் ப்ரண்ட்... பைரவி!"

"ப்ரண்டா?"

"ஆமா... நான் சென்னையில் இருந்தவரை அவளும், நானும் ஒண்ணாவே படிச்சோம். யூ... நோ... சிக்ஸ்த் ஸ்டாண்டர்ட்லேர்ந்தே நாங்க ப்ரண்ட்ஸ்! அம்மாவுக்கு பைரவின்னா ரொம்ப பிடிக்கும். பாவம்ண்ணா அவ..."

"ஏன்?"

"அவங்க வீட்ல அவளை யாருக்குமே பிடிக்காது. அதுவும், அவ அப்பாவுக்கும் அண்ணாவுக்கும் ஆகவே ஆகாது. படிபடின்னு ரொம்ப டார்ச்சர் பண்ணுவாங்க. பாடத்திலேர்ந்து கேக்கற கேள்விக்கு பதில் சொல்லலேன்னா... அன்னைக்கு லஞ்ச் கிடையாது. மாசத்துல பாதிநாள்... அவ மதியம் சாப்பிடறதே இல்லே. அடிக்கறது, சூடு வைக்கிறதுன்னு... அவ வீட்டுக்கு போறதுக்கே பயப்படுவா!"

"..............?"

"வெயிலுக்கு பயந்து நெருப்புல குதிச்ச கதையா... அவ ஒரு தப்பான முடிவெடுத்தா. அவ பின்னாடியே ஒருத்தன்... சேகர்னு பேரு... அலைஞ்சான். அவ வீட்டுப் பிரச்சினையை தெரிஞ்சுக்கிட்டு மதியத்துல லஞ்ச் வாங்கிட்டுப் போய் ஸ்கூல் வாசல்ல நிப்பான். ஆரம்பத்துல அவன் மேல எந்த ஈடுபாடும் இல்லாம இருந்தவ... அவனுடைய அந்த செய்கையால... யாரும் காட்டாத அன்பை, இவன் காட்டறானேன்னு அவளும் அவனை நேசிக்க ஆரம்பிச்சா. இந்த விஷயத்தால அவளோட படிப்பும் பாதிக்க ஆரம்பிச்சது. ரெண்டு சப்ஜெக்ட்ல பெயில் ஆன பைரவியை முழுப் பட்டினிப் போட்டு, அவங்கண்ணனும், அப்பாவும் பெல்ட்டால் விளாசித் தள்ளிட்டாங்க. அந்தத் தழும்பு இன்னும் அவ கைகால்ல இருக்கு. அதுக்கு மேல தாங்க முடியாமதான் மறுநாள் அவ சேகரோட ஓடிப் போய்ட்டா! ஆனா, அவனோட சுயரூபம் ஆறுமணிநேரத்துல அவளுக்குத் தெரிஞ்சு போச்சு. கல்யாணம் பண்ணிக்கலாம்னு தர்மபுரிக்கு கூட்டிட்டுப் போனவன் ஒரு லாட்ஜ்ல ரூம் எடுத்துத் தங்கியிருக்கான். கொஞ்சநேரத்துல அவனோட ப்ரண்ட்ஸ்னு சொல்லிக்கிட்டு நாலுபேர் அதே ரூம்ல வந்திருக்காங்க. அவங்க பேச்சு, செய்கை இதெல்லாம் பிடிக்காம, பயந்துப் போய் நைஸா வெளியேறி... எப்படியோ தப்பிச்சு, நடுராத்திரி வீடு வந்து சேர்ந்திருக்கா. ஆனா, அதுக்குள்ளே அவ காணாமப் போன விஷயம் வீட்ல பண்ணின ரகளைல எல்லாருக்கும் தெரிஞ்சுப் போச்சு.

அவளோட அப்பா ஹார்ட் அட்டெண்ட் பண்ணி, கழுத்தெலும்பு முறிஞ்சு படுத்தப் படுக்கையாய்ட்டார். அக்கா ஒருத்தி, பயர்ல இறந்துட்டா. அன்னைலேர்ந்து அவளை ஒதுக்கி வச்சிட்டாங்க. ஒரே வீட்ல தனிமரமாய்ட்டா.

அப்புறம்தான் அவளுக்கு ஒரு வைராக்கியமே வந்தது. மறுபடி ஸ்கூலுக்கு

வந்தா. அவங்க தாத்தா மட்டும் இவமேல பிரியமா இருப்பார். அவர்தான் ஸ்கூல்ல பேசி மறுபடி சேர்த்து விட்டார். யாருக்கும் தெரியாம படிக்கறதுக்கு பீஸ் கட்டுவார். அம்மாவுக்கு அவ பிரச்சினைப் புரிஞ்சது. லேட், இனமும் அவளுக்கும் சேர்த்து என்கிட்ட லஞ்ச் குடுத்து விடுவாங்க. அவங்க வீட்ல காட்டாத அன்பை அம்மா குடுத்தாங்க.

ப்ளஸ்டூ படிக்கும்போது பெங்களூர்ல செட்டிலாக வேண்டிய நிலைமை. அதுக்குப்பிறகு... பைரவிய இப்பதான் பார்க்கிறேன். பட், போன்ல அடிக்கடி பேசிப்போம்."

"இப்ப என்ன பண்றா... உன் ப்ரண்ட் பைரவி?" இண்டலாகவும், அழுத்தமாகவும் வார்த்தைகளை உச்சரித்தான்.

"சொன்னா ஆச்சர்யப்படுவே!"

'நான் அவளைப் பத்திச் சொன்னா..., நீதான் ஆச்சர்யப்படுவே!' மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

"அவ ஒரு டிடெக்டிவ்... தெரியுமா?"

"வாட்?"

"ஆமாண்ணா! ப்ளஸ்டூ முடிச்சப் பிறகு, சாப்பிடறதுக்கோ, மேற்கொண்டு படிக்கிறதுக்கோ வழியில்லாத நிலைமை. அப்பதான் யாரோ ஒருத்தர் டிடெக்டிவ் ஏஜென்சி பத்தி சொல்லியிருக்காங்க. சேர்ந்து... கொஞ்ச நாள் பிராக்டிஸ் பண்ணிட்டு... இப்ப ஜமாய்க்கிறா தெரியுமா? கரஸ்ல டிகிரி முடிச்சிட்டா. தவிர, ரெண்டு ஏழைப் பசங்களுக்கு படிக்கறதுக்கு ஹெல்ப் பண்ணிட்டிருக்கா. ஆனா, ரொம்ப ஆபத்தான ஜாப்!"

அவள் ஒவ்வொன்றாய் சொல்லிக் கொண்டே போக.. அவளை பார்த்த நிகழ்வுகள் எல்லாமே இப்போது அவள் பார்த்த பணியோடு ஒத்துப்போவது புரிந்தது.

'அப்படியானால் அன்று ஆண்களால் விரட்டப்பட்டு வந்ததெல்லாம்?' உள்ளம் சமாதானமாகவில்லை.

ஆனால், அவன் மனதைப் படித்தவள் போல அடுத்து அதைப் பற்றிதான் பேசினாள்.

"சில சமயம் அரசியல்வாதிகளை வேவு பார்க்கும் வேலை வரும்போது, அவர்கள் ஆட்களால் விரட்டப்பட்டு, பலமுறை தப்பித்திருக்கிறாள்.

பெரும்பாலான கேஸ்கள், கணவனை மனைவி சந்தேகப்படுவது போல்தான் டிடெக்டிவ் ஏஜென்சிக்கு வருமாம். பைரவி அழகான இளம்பெண் என்பதால், அம்மாதிரியான கேஸ்களுக்கு அவளைத்தான் அமர்த்துவார்களாம். அவள், குறிப்பிட்ட ஆண்களோடு நெருங்கிப் பழகுவதுபோல் நடித்து... அவர்களைப் பற்றிய ரிப்போர்ட்டைத் தருவாளாம்."

நிருபமா சொல்லச் சொல்ல பைரவி மேல் பரிதாபம்தான் ஏற்பட்டது.

'அவளின் வேலைதான் பலரின் பார்வைக்கும் தப்பாக தீனிப் போட்டிருக்கிறது. சிராளனின் காதிற்கு போய் சேர்ந்த தகவலும் அதே நிலைதான். எதிர்கால வாழ்க்கைப் பற்றிய பயமின்றி, அக்கறையின்றி அவள் ஏன் இந்த வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ள வேறு வேலையா கிடைக்காது?'

அன்று முழுக்க... பைரவியைப் பற்றிய விஷயங்களே இதயம் முழுக்க விரவிக் கிடந்தது. ஆனாலும், ஒரே ஒரு சின்ன முள் உறுத்தாமல் இல்லை.

'சரி... டிடெக்டிவ் என்பதால் அவளின் செய்கைகள், மத்த விஷயங்களுக்கு ஒத்துப் போனதென்னவோ நிஜம். ஆனால், என்னிடம் வலிய வந்து கண்ணடித்து கிறக்கத்துடன் அழைத்தாளே? புல் மீல்ஸே சாப்பிடலாம், பணமெல்லாம் எதிர்பார்க்க மாட்டேன் என்றாளே? இதெல்லாம் எதில் சேர்த்தி? என்னை வேவு பார்க்க அனுப்ப வேண்டிய அவசியமே இல்லையே... ஆனால் பெயரை மாற்றிச் சொன்னாள். அது ஏன்?' குழப்பம் அதிகரித்தது.

'கடற்கரையில் வாய்விட்டு சிரிக்கும் கூட்டத்தில் இருந்தாளே? ஏன்?'

'அவளுடன் சுகத்தையோ, சோகத்தையோ பகிர்ந்துக் கொள்ள அருகில் யாருமில்லை என்பதாலா?'

அவளின் சிரிப்பு நினைவுக்கு வர... தான் அவளை மோசமாய் பேசியதெல்லாம் ஞாபகத்திற்கு வந்து இம்சித்தது. 'அன்று ரத்தக்கறையோடு, தடியர்களால் விரட்டப்பட்டு என் காரில் தஞ்சம் புகுந்தபோது... எவ்வளவு கேவலமாய் பேசினேன்?'

அன்று மட்டுமல்ல.. அடுத்து வந்த நாட்களிலும் பைரவியின் எண்ணங்களே சுழன்றடித்தன.

○○○

"நீ ... ரொம்ப பிஸியான ஆள்தான்... மறுக்கலே... ஆனா, என் தங்கையின் நிச்சயதார்த்த விழாவிற்கு உன் போன்ற நல்ல மனிதனின் வாழ்த்து மிக அவசியம் என நினைக்கிறேன். கண்டிப்பாய் வந்துவிடு" என்று சிராளன் அழைத்திருந்ததால்... ஒரு முக்கியமான பிரமுகர்கள் சந்திப்பின் இடையில் பர்மிஷன் கேட்டுக் கொண்டு நிச்சயவிழாவிற்கு வந்தான் கலிங்கர்.

திருமண மண்டபத்தில் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

சிராளனும், செல்வியும், ஜெயலட்சுமியும் சுறுசுறுப்பாக வளைய வந்து... வந்தவர்களை முகம் மலர கவனித்தனர். சிராளன் நண்பனைப் பெரிதாய் வரவேற்று அமர்த்தினான்.

கலிங்கரின் கண்கள் அந்தக் கூட்டத்தில் பைரவியைத் தேடின.

தென்படவில்லை.

சுருதி... அவள் வயதொத்த சிறுமியுடன் ஓடியாடிக் கொண்டிருக்க... அவளைப் பிடித்து செல்லம் கொஞ்சி, மெல்ல விசாரித்தான்.

"உனக்கு இருத்தி அத்தையைப் பிடிக்குமா?

# வெண்மணல் பாலைவனம்!

அமெரிக்காவில் நியூமெக்சிகோ மாகாணத்தில் வெண்மணல் பாலைவனம் உள்ளது. பூமியில் எந்தவொரு இடத்திலும் இதுபோன்ற வெண்மணல் பாலைவனத்தை நாம் பார்க்க முடியாது. நியூ மெக்சிகோவில் மட்டுமே இந்த வெண்மணல் பாலைவனத்தைக் காண முடியும். 275 சதுர மைல் நீளத்துக்கு பரவியுள்ள இந்த பாலைவன மணல் மீது 'ஜிப்சம்' என்கிற தாதுப்பொருள் முழுவதுமாக பரவி மூடிக் கொண்டுள்ளது.

அலை அலையாக நீண்டு பரவி இருக்கும் இந்த வெண்மணல் பாலைவனம் பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் ஓர் அற்புத இடமாக உள்ளது. அமெரிக்காவின் தேசிய நினைவுச் சின்னமாக இந்த பாலைவனம் கருதப்படுகிறது. இந்த பாலைவனத்துக்கு செல்லும் சாலை வாரத்தில் ஒரு முறையோ அல்லது இரு முறையோ சில மணிநேரங்கள் மூடப்பட்டிருக்கும். காரணம் நம் தலைக்கு மேலே பறக்க விட்டு ஏவுகணை சோதனை நடத்துவதுதான்.

இந்த பாலைவனத்தில் எதைப் பார்த்தாலும் வெள்ளையாக பிரகாசமாகவே தெரியும். தலையில் நீலநிற தொப்பியை அணிந்தது மாதிரி இந்த பாலைவனத்தின் மீது நீலவானம் எப்போதும் பளிச்செனவே இருக்கும். கோடை காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும். 1849-ல் அமெரிக்க ராணுவம் இந்த பாலைவனத்தை ஆராய்ச்சி செய்ய முதன் முதலாக முயற்சி மேற்கொண்டது. 1898-ல் தேசிய பூங்கா அமைக்கவும் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்த திட்டம் நிறைவேறவில்லை.

இதேபோல் 1921-1922-ல் ஆல்பர்ட் பேக்கான் பால் என்பவர் இந்த பாலைவனத்தில் வருடம் முழுக்க திறந்திருக்கும்படியான தேசிய பூங்காவை அமைக்க திட்டமிட்டார். கைகூடுவது போல் இருந்த அந்த திட்டம் பிறகு கைவிடப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகளுக்கு ஒரு காட்சிப் பொருளாக மட்டுமே இந்த வெண்மணல் பாலைவனம் திகழ்கிறது.



பைரவி அத்தையைப் பிடிக்குமா?"

"இருக்கி அத்தைதான்!"

"அப்ப... பைரவிக்கிட்டே சொல்றேன் இரு!"

"சொல்லுங்க... அவங்கதான் வரலையே? நான்தானே டாடி இங்கெல்லாம் வரக்கூடாதுன்னு சொல்லச் சொன்னாங்கன்னு சொன்னேனே?" சிறு பெண் பழிப்புக் காட்டினாள்.

'பாவம் பைரவி... இவர்களால் எந்தளவு ஒதுக்கப்படுகிறாள்!'

○○○

வீடு களைக்கட்டி விருந்தது. வேலையாட்கள் தோரணம் கட்டி, வாழை மரத்தை நட்டு வைத்தனர்.




நிருபமாவுக்கு அன்று சிம்பிளாய் ஒப்புத்தாம்பாளம். ஆனால், நடக்கும் கூத்தைப் பார்த்தால் சிம்பின் மாதிரியேத் தெரியவில்லை. தாட்சாயணி ஆட்களை விரட்டி, விரட்டி வேலை வாங்கினாள்.

பைரவி.... சரிகை பார்டரிட்ட சரிதாரில் முழும் மல்லிகையில்... அம்சமாய் உள்ளே வர... சில கணங்கள் கண்ணிமைக்காமல் பார்த்தாள் தாட்சாயணி.

'என்ன லட்சணமானப் பெண்? அன்று நிருபமாவுடன் வந்தவள்தானே இவள்?'

தாட்சாயணியைப் பார்த்ததும் புன்னகைத்தவள், "அம்மா... நிருபமா எங்கே இருக்கா?" என்றாள்.

"மாடியில...!"

படியேறிச் சென்றாள்.

தன்னறையிலிருந்து வெளியே வந்த கலிங்கர் கீழேச் செல்ல... மாடிப்படியில் இறங்க... அவளை நேருக்கு நேர் பார்த்து விழந்தான்.

சிரிப்பதா, வேண்டாமா? எனத் தயங்கினான்.

அவளுக்கோ, மின்சாரத்தை தொட்ட அதிர்ச்சியில் முகம் இருண்டது.

'இ..வ..னா? இங்கே.... எப்படி?'

கலிங்கர் அவளையேப் பார்த்தான்.

அந்தப் பார்வையை சந்திக்க தைரியமின்றி, தரையில் போட்ட மீன்களாய் விழிப் பார்வை பெண்டுலமாடியது.

"நா... நான்... நிருபமா... என் ப்ரண்ட்! நீங்க... வந்து... ஸாரி... நான் போய்டறேன்!"

"ஒரு நிமிஷம்!"

"............?!"

"இது என் வீடுதான். நிருபமா என் தங்கச்சி!"

"ஸ...ஸாரிங்க... சத்தியமா இதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்கவீடுன்னு தெரிஞ்சிருந்தா நான் வந்திருக்கவே மாட்டேன். நான்... போய்டறேங்க!"

"நில்லுங்க... எதுக்கு வந்துட்டு ஓடறீங்க?"

"உங்க கண்ணு முன்னால நிக்கற தைரியம் எனக்கில்லீங்க. நீங்களும் அன்னைக்கு அப்படித்தானே..."

"ஸ்டாப்... ஸ்டாப்! நிருபமா உங்களைப் பத்தி எல்லாமேச் சொன்னா. போங்க... அதோ.. நிருபமா அந்த ரூம்லதான் இருக்கா!" வழிவிட்டு இறங்கினான்.

பைரவியால் நம்ப முடியவில்லை.

அவன் எத்தனையோ பேரிடம், எவ்வளவோ வசவுகளை வாங்கியிருக்கிறாள். ஆனால், கலிங்கர் அவளை மோசமானவளாய் சித்தரித்து கேவலமாய் திட்டியபோது... ஏனோ, தனிமையில் கதறியழுதாள்.

அப்படிப்பட்ட கலிங்கரா இது?

மெல்லத் திரும்பி போகும் அவனின் முதுகைப் பார்த்தாள். அவன் பார்வையில் அப்படியொரு இதம்!

○○○

வீட்டில் தடபுடலாய் விருந்துத் தயாராக பைரவி எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்தாள்.

நிருபமாவின் அம்மா சுகன்யா கூட செல்லமாய் அதட்டினாள்.

"என்ன நீ... கொஞ்சம் கூட ரெஸ்ட் எடுக்காம... எல்லா வேலையும் செய்யறே? அதுக்குதான் இத்தனை ஆளுங்க இருக்காங்களே! போம்மா... போய் முகத்தை கழுவிட்டு ப்ரெஷ்ஷா வா..."

"ப்ளீஸ் ஆண்ட்டி... என்னைத் தடுக்காதீங்க... இப்படியொரு வாய்ப்பை என் குடும்பத்துலதான் தரலே... நீங்களாவது செய்ய விடுங்க. எனக்காக சிலபேர் இருக்காங்கன்ற சந்தோஷமாவது மிஞ்சட்டும்" என்று அவள் சொன்னதை கலிங்கர் கேட்டு விடுகிறான்.

அந்த வார்த்தை அவனை மேலும்



சங்கடப்படுத்தியது.

○○○

"சொன்னாக் கேளேன்... அங்கெல்லாம் உனக்கு போரடிக்கும்!"

காரில் பக்கத்தில் அமர்ந்திருந்த நிருபமாவிடம் சொன்னான் கலிங்கர்.

"பார்ப்போமே... உண்மையிலேயே நீ நல்லா வாதாடுவியா... இல்லே... அதெல்லாம் வீட்டோட மட்டும்தானான்னு?"

"அந்த சந்தேகம் வேற இருக்கா உனக்கு?"

"நிறையவே!"

சிரித்தபடி அவள் தலையில் தட்டினான்.

நிருபமாவுக்கு நீதிமன்றம் எப்படியிருக்கும்? சினிமாவில் வருவதுபோலவே கூண்டு, நீதிபதி மேஜையில் 'ஆர்டர், ஆர்டர்' என்று தட்டும் சுத்தியல், சத்தியம் வாங்கும் புத்தகம், வக்கீல்கள் வாதாடும் ஸ்டைல் எல்லாவற்றையும் நேரில் பார்க்கும் ஆர்வம். அதனால் கூடவே காரில் ஏறி அமர்ந்து விட்டாள்.

"உனக்கு போரடிக்குமேன்னு சொன்னேன். சரி, கூட உன் ப்ரண்ட் பைரவியையும் கூட்டிட்டு வர்றதுதானே?"

"ஆஹா... எலி வலமாப் போகுதே?" கிண்டலாய் சொன்னாள்.

"அப்படின்னா?"

"பைரவி அழகாயிருக்காள்ல?"

"...........?!"

"அவளை சைட்டடிக்கிறியா?"

"ஏய்... லூசு... நீ தனியா இருப்பியே... கம்பெனிக்கு அவளும் இருக்கட்டுமேன்னு?!"

"அதென்னமோ உன்னைப் பார்த்தாலே பயமாயிருக்குன்னு வரமாட்டேங்கறா. என் அண்ணன் ஹீரோ மாதிரி அழகாதானே இருக்கார்! ஏன் பயப்படறேன்னேன்? அப்பவும் வரலே..."

"..............?!"

"இப்ப அவ ஊர்லயே இல்லே. அவங்க ஏஜென்சில ஐதராபாத் அனுப்பியிருக்காங்க. நாளைக்குதான் வருவாளாம்.... போன் பண்ணியிருந்தா!"

"டிடெக்டிவ் ஏஜென்சிங்கறது... அவளை மாதிரி பொண்ணுங்களுக்கு ரொம்பவே ஆபத்தான விஷயம். வேற வேலை பார்க்கலாமே..."

"நானும் அப்படித்தான் பீல் பண்றேன்! அவ தைரியசாலிங்கறதால, கஷ்டமான ஆபத்தான ஆபரேஷனுக்கெல்லாம் அவளைத்தான் அனுப்பறாங்க. அவ எதிர்காலத்தை நினைச்சா பயமாயிருக்குண்ணா! அவளுக்குன்னு ஒரு வாழ்க்கை வேணாமா? அப்படி அமையணும்னா... அவளை நல்லா புரிஞ்சுக்கிட்டவன்தானே கல்யாணம் பண்ணிக்க முடியும்? யார் அவளை புரிஞ்சுக்குவா?"

"இவ்ளோ கவலைப்படறியே... உன்னைப் பார்க்க சந்தோஷமாயிருக்கு!"

"நானும் கல்யாணமாய்ட்டு மதுரையில செட்டிலாய்டுவேன். பாவம், அப்புறம் அவளுக்கு ஷேர் பண்ணிக்கக் கூட வேற யாருமில்லே!"

"அவளுக்குன்னு ஒருத்தன் வராமலாப் போய்டுவான்? அறியாத வயசுல பண்ணதெல்லாம் மன்னிக்கவே முடியாத குற்றமா என்ன? அவளுக்கு மனசுக்கு பிடிச்ச யாரையாவது கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு!"

"அதுக்கூட அவளுக்கு வாய்ப்பில்லேண்ணா!"

"ஏன்?"

"அவ ஒருத்தனை ஒண்ணு ரெண்டு எடத்துல பார்த்து இருக்கா. 'லவ்'வுன்னு சொல்ல முடியாது. ஆனா, என்னவோத் தெரியலே... அவரைப் பார்க்கும் போதெல்லாம்... மடியில தலைவச்சு அழத் தோணும். இத்தனைக்கும் என்னை அவருக்குத் தெரியாதுன்னு சொன்னா. ஆனா ஒரு நாள் அவளுக்குத் தந்த அசைன்மெண்ட்ல... பொண்ணு வீட்டுக்காரங்க... மாப்பிள்ளை, பொண்ணுங்க விஷயத்தில் எப்படி? ஏன்னா லேட் நைட்டா வீட்டுக்கு வர்ற ஆன்னு சந்தேகப்பட்டு டிடெக்டிவ் ஏஜென்சியிலே கண்டுபிடிச்சு சொல்லச் சொல்லியிருக்காங்க. பைரவியோட கெட்ட நேரம், அவ யாரைப் பார்த்து உருகினாளோ... அவன்கிட்டேயே கால்கேர்ள் மாதிரி நடிக்க வேண்டிய கட்டாயம். ஏன்னா அவன்தான் பொண்ணு வீட்டுக்காரங்க சொன்ன மாப்பிள்ளையாம்! கடைசியிலே பையன் அக்மார்க் தங்கமாம். பாவம் பைரவிதான்... அவன் தப்பா நினைச்சிட்டான். அவளுக்கு ஒரே வருத்தம். அவன் யாரோ, எவனோ இருந்துட்டுப் போகட்டும். ஆனா, அவன் மனசுல தான் மோசமான பொண்ணா ரிஜிஸ்டர் ஆயிட்டோம்னுதான் வருத்தப்பட்டு பேசினா!"

நிருபமா சொல்லச் சொல்ல... கலிங்கர் அதிர்வலையிலிருந்து விடுபட நேரமானது.

"ஓ... அம்மாக்கூட சொன்னாங்களே. பொண்ணு வீட்ல சந்தேகப்பட்டு விசாரிச்சாங்கன்னு! கடைசியில் பனைமரத்தடியில் நின்னு பால் குடிச்சது பைரவியா!" அதுநாள் வரை மனதை உறுத்திக் கொண்டிருந்த விஷயம்... சட்டெனக் கரைந்து காணாமல் போனதில்... இதயம் லேசானது போல உணர்ந்தான்.

○○○




சேம்பரிலிருந்து திருபமாவுடன் வெளிப்பட்டான்.

"என்ன திரு... இப்ப உன் சந்தேகம் தீர்ந்ததா? உங்கண்ணன்... திறமைசாலிதானே?"

"ம்ம்... பரவாயில்லை!" அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி சொல்ல... தலையில் குட்டினான்.

"திமிரைப் பாரேன்..."

அதே நேரம் அவன் மொபைல் அலற... பேசினான்... முகம் மாறியது.

"ஓ... வர்றேன்!" வைத்தான்.

"என்னண்ணா?"

'சொல்லலாமா' என்று நினைத்து எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

"இல்லேம்மா... திடீர்னு ஒரு டெத்... நான் உடனே அங்கே போகணும்.. நீ..."

"ஓக்கேண்ணா... நீ கிளம்பு... நான் ஆட்டோவுல போய்க்கறேன்!"

"தாங்க்ஸ்டா!"

அவள் கிளம்பிச் செல்ல... கலிங்கர் காரில் ஏறி அமர்ந்தான்.

சீரானனிடமிருந்துதான் போன் வந்திருந்தது. அவன் அப்பா திடீரென மாரடைப்பில் இறந்து விட்டாராம். திருபமாவிடம் சொன்னால்... 'அப்ப.. ஏற்கனவே பைரவியை உனக்குத் தெரியுமா?' என்று கிளறுவாள். தேவையற்ற பிரச்சினை என்றுதான் சொல்லவில்லை.

சீரானன் வீட்டில் நிறையக் கூட்டம்.

'இத்தனை வருஷம் படுக்கையிலேயே சாவோட போராடி, மனுஷன் இன்னைக்காவது ஜெயிச்சாரே' என்றுதான் உறவினர்கள் கூட்டம் அவர் சாவிற்கு நிம்மதி பெருமூச்சை போர்த்திக் கொண்டிருந்தது.

கலிங்கர் சீரானனின் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டான்.

நேரம் கடந்தது.

"ஏற்கனவே நோய்ல பாழான உடம்பு. ரொம்ப நேரம் தாங்காது. ராகுகாலம் வர்றதுக்குள்ளே எடுத்துடறது நல்லது!" உறவுக்கார பெரியவர் சொல்ல...

மற்றவர்களும் ஆமோதித்தனர்.

சடங்குகள் தொடங்கின.

அதுநேரம் வரை அடக்கிக் கொண்டிருந்த கேள்வியை கேட்டு விட்டான் கலிங்கர்.

"சீரா..."

"ம்..."

"உன் தங்கை எங்கே?"

"அதோ...!"

கிருத்திகாவைக் காட்டினான்.

"நான் பைரவியைக் கேட்டேன்!"

அருகே... கண்ணீருடன் அமர்ந்திருந்த சங்கரபாண்டியன் அந்தக் கேள்வியில் நிமிர்ந்துப் பார்த்தார்.

"அவளைப் பற்றி இப்ப எதற்கு கலிங்கர்?"

"என்ன இப்படிப் பேசறே?"

"அந்த கழிசடைய ரெண்டு மூணு நாளா வீட்லயேக் காணோம். எவன் கூட சுத்திக்கிட்டிருக்காளோ?"

"உன் கோபம் நியாயமானதா! இல்லே... அவளைப் பத்தி நீங்கள்லாம் புரிஞ்சு வச்சிருக்கறது தப்பான்னு பேச வரலே! அவளும் உன் அப்பாவோட ரத்தம். இந்த நேரத்துல அவ இருக்கறதுதானே நியாயம்! அவளுக்கு தகவல் சொல்லி..."

"இல்லை கலிங்கர்! இது அப்பாவோட விருப்பம். அவ எவ்ளோப் பெரிய பாவம் செஞ்சிருந்தா கடவுள்... இந்த நேரத்திலே அவளை இங்கே இல்லாமப் பண்ணியிருப்பார்?"

"அதெல்லாம் கோபத்துல சொல்றது சீரா! 'பாடிய' நாளைக்கு எடுக்கறாமாதிரி பேசு... அவளுக்கு தகவல் சொல்லி வரச் சொல்லு!"

"அவ.. இப்ப இங்கே இருந்திருந்தாக்கூட... நான் அப்பா முகம் பார்க்க விட்டிருக்க மாட்டேன்!" அவன் முகத்திலிருந்த தீவிரம், கோபத்தின் வெறியை அப்பட்டமாய் காட்டியது.

அதற்கு மேல் அவனை வற்புறுத்தும் தைரியம் கலிங்கருக்கு இல்லை.

ஆனாலும் பைரவிக்கு இழைக்கப்படும் தீங்கை எண்ணி ஆற்றாமை ஏற்பட்டது.

அத்தனை துக்கத்தின் மத்தியிலும், தன் பேத்தியின் உரிமைக்காக குரல் கொடுக்கும் கலிங்கரை பார்த்து சங்கரபாண்டியனுக்கு ஆறுதலாய் இருந்தது.

○○○

அந்தத் தெருவிற்குள் நுழையும்போதே... பைரவியின் காதிற்கு விஷயம் வந்து விட்டது.

கதறிக் கொண்டே ஓடினாள்.

"அப்ப்ப்பா...!"

அவளின் கதறலில்... பால் சடங்கிற்காக வந்திருந்த கும்பல் அனைவரும் அவளைப் பார்த்தனர்.

வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஹாலில் பெரிதாய் லேமினேட் செய்யப்பட்ட போட்டோவில் மாலைக்குள் அடைபட்டிருந்த அப்பாவைப் பார்த்து மடங்கி அமர்ந்து அழுதாள்.

சுவரோரம் அம்மா நிர்மலமான கண்களுடன் அமர்ந்திருந்தாள்.

"அநியாயம் பண்ணிட்டீங்களே! என்னை பெத்தவரோட முகத்தை கடைசியா பார்க்கக் கூட விடாம பாவம் பண்ணிட்டீங்களே!"

தாத்தா அவளைப் பார்த்து கண்ணீர் விட்டார்.

"ஏய்... நீ ஏன் இங்கே வந்தே?" சீரானன் அவள் முன் வந்து நின்று இரைந்தான்.

"இப்படியொரு கொடுமையை யாரும் பண்ண மாட்டாங்க. ஆனா, நீ பண்றே? என் அப்பா முகத்தை பார்க்க விடாம சதிப்பண்ணதே நீதானே!"

"சீ... வாய மூடு! அவர் என்னைக்குடி உன்னை பொண்ணா ஏத்துக்கிட்டார்? உயிரோட இருக்கும் போதே, உன் கையால தண்ணிக் கூட வேணாம்னு உயிருக்குப் போராடினவர். நீ சாக்கடைடி... அவர் போட்டோ முன்னாடிக் கூட நிக்காதே... போ...!"

"அப்படி என்ன தப்புப் பண்ணிட்டேன் நான்? அதை தப்புன்னு சொன்னா... அதைப் பண்ண வச்சதே நீங்கதானே?"

"..........?!"

## புற்றுநோயை விரட்டும் காளான்!

'நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்' என்று வாய்க்கு லேசாக சொல்லி விடுகிறோம். ஆனால் இந்த காளானில் தான் கொழுப்புச் சத்து இல்லாத, குறைந்த கலோரிகள் உடைய கனிமச் சத்து நிறைந்திருக்கிறது. இது சத்தான உணவு என்பதோடு நோய் எதிர்ப்பு சக்திகளும் இதில் உண்டு. புற்றுநோயை எதிர்த்து போராடுவதிலும் காளான்கள் முக்கிய



பங்கு வகிப்பதாக ஜப்பான் மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும் இதில் உள்ள 'க்ளுடமிக்' என்ற அமிலம் தொற்று நோய்களை எதிர்த்து போராடும் வல்லமை வாய்ந்தது. மூட்டு வலிக்கும் காளான் சிறந்த நிவாரணி. இதில் உள்ள 'எரிடாடினைன்' என்ற வேதியல் பொருள் கொழுப்புச் சத்தை குறைப்பதுடன், அதிகப்படியான கொழுப்பை வெளியேற்றி விடுகிறது. இருதய நோய், ரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்துகிறது.

வெள்ளைக் காளானில் உள்ள 'செலீனியம்' பெருஞ்சுரப்பி புற்று நோயை தடுக்கிறது. 'க்ளுடமிக்' அமிலம் நிறைந்திருப்பதால், இயற்கையிலேயே நறுமணம் வாய்ந்த காளான்கள் உணவிலும் சுவை கூட்டுகிறது.

இனிமேலும் காளான்களை லேசாக எடை போடுவீர்களா? மூச்... கூடாது.

"ஏறாதப் படிப்புக்காக உதைச்சீங்க... கூடு வச்சீங்க. கஷ்டப்பட்டு படிச்சா... குறைஞ்சது அஞ்சாவது ரேங்க்காவது வாங்கணும்னு பட்டினிப் போட்டீங்க... ஒரு நாள்... ஒரே ஒருநாள்... யாராவது என்கிட்ட பாசத்தைக் காட்டியிருப்பீங்களா?

என்னைப் பார்த்து, பரிதாபப்பட்டு ஸ்வீட் வாங்கிக் கொடுத்தவன் மேலே அந்த வயசுல என்னத் தோணும்? நீங்க தராத பாசத்தையும், சாப்பாட்டையும் அவன் தந்தபோது, என் கண்ணுக்கு அவன்தான் தெய்வமா தெரிஞ்சான். பதினாறு வயசுல, உலகம் தெரியாத நான் அவன் கூட ஓடிப்போனது தப்புதான். ஏன்னா அடியும், சூடும், பசியும்... அறுத்துக்கிட்டு ஓடத்தானே சொல்லும்?

ஆனா, அன்னைக்கே அவன் நிஜமுகம் என்னன்னு தெரிஞ்சு... தப்பிச்சு ஓடி வந்தப்ப... விஷயத்தை ஊருக்கே தெரிய வச்சு, மானம் போச்சுன்னு ஆளாளுக்கு பண்ண கூத்துல... என்னை மட்டும் ஜோக்கராக்கிட்டீங்களே!

அவசரப்பட்டு அக்காவும், அப்பாவும் எடுத்த முடிவுல... எனக்கு முடிவு கட்டிட்டீங்களே! ஓரேயடியா ஒதுக்கி வச்சு, நாயை விடவும் கேவலமா பார்த்தீங்க.

சாப்பாட்டுக்காக... நான் உழைச்சாகணுமே! உயிரை பணயம் வச்சு டிடெக்டிவ் ஏஜென்சியிலே வேலை செய்யறேன். ஆனா, அதையும் நீங்க நம்பலே! கன்னிப்பெண்ணான என்னை கழிசடையா சித்தரிச்சுப் பேசறீங்க. எனக்கு நோவு சாவு வராதா? உடம்பு முடியாம வாந்தி எடுத்தா... அதை கர்ப்ப வாந்திங்கறீங்க.

மன்னிப்பே இல்லாத தண்டனையைக் குடுத்து என்னை சிறுக சிறுக சாகடிச்சிட்டிருக்கீங்க."

"இதோ பார்! இந்த கதை, வசனமெல்லாம் வேற எங்கயாவது போய் சொல்லு! மரியாதையா இந்த எடத்தை காலிப் பண்ணு!"

பைரவி... கண்ணீர் விழிகளுடன் தாயை ஏறிட்டாள்.

"அம்மா... இவங்களை விடு.. நீக்கூடவா என்னை நம்பலே? ஒரு தாய்க்கு உணர முடியாதா தான் பெத்த பெண்ணைப் பத்தி. நான் ரொம்பப் பாவம்மா... நீயாவது என்னை நம்பு!"

ஜெயலட்சுமி விம்மலுடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"இப்ப போகப் போறியா... இல்லையா?"

சீரானன் வெறியுடன் அவனை நோக்கி வர... பைரவி எழுந்து... திரும்பி நடந்தாள்.

○○○



"கலிங்கர்... ப்ளீஸ்... என் மச்சான் நிலைமை ரொம்ப மோசமாயிருக்கு. உடனே ப்ளட் வேணும்னு டாக்டர் சொல்லிட்டார். ரேர் குரூப்ங்கறதால... கிடைக்க கஷ்டமாயிருக்கு. மொபைல்லேயும் ஹெல்ப் கேட்டிருக்கோம். உனக்குத் தெரிஞ்சவங்க யார்கிட்டயாவது அந்த குரூப் ப்ளட் இருந்தா.. தயவுப் பண்ணி ஹெல்ப் பண்ண சொல்லுடா..." அவனுடன் படித்த குருபரன் போனில் பதற்றமாய் சொன்னான்.

"ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் குரு... நான் ட்ரை பண்றேன்!"

"தாங்க்ஸ்டா!"

அன்றுதான் ஒரு கேஸ் விஷயமா டெல்லி சென்று விட்டு வந்திருந்தான்.

தன் ஜூனியர்களில் ஒருவனான ஜேம்ஸை அழைத்தான்.

"ஜேம்ஸ்... நம்ம சர்க்கிள்ல 'ஏபி' பாஸிடிவ் ப்ளட் குரூப் உள்ளவங்க யாருன்னு கொஞ்சம் சீக்கிரம் கண்டுபிடிச்சு சொல்லுங்களேன். அர்ஜண்ட்!"

"ஷ்யூர் சார்!"

○○○

அடுத்த நாற்பத்தைந்தாவது நிமிடம் மிலன் ஹாஸ்பிடலில் தன் ஜூனியர் விக்கிரமனுடன் இருந்தான் கலிங்கர்.

குருபரன் குறிப்பிட்டிருந்த வார்டை நோக்கிச் சென்றபோது... ஒரு இளம்பெண்ணுடன் காரிடாரில் வந்துக் கொண்டிருந்தான் குருபரன்.

கலிங்கரின் முகத்தில் வியப்பு!

'பைரவி? இங்கே எப்படி?!'

குருபரன் இவனைப் பார்த்து விட்டு வேகமாய் வந்தான்.

"வா... கலிங்கா...!"

"இதோ... இவர்கிட்டே நீ கேட்ட ப்ளட் குரூப் இருக்கு!"

"தாங்க்ஸ்பா... ரத்தம் குடுக்க ரெண்டு பேராவது தேவை. இதோ... இவங்க... இப்பதான் வந்து டொனேட் பண்ணாங்க. மொபைல்ல எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தேன்னு சொன்னேனே! அதை யாரோ இவங்களுக்கு பார்வர்ட் பண்ணி இருக்காங்க. அதை பார்த்துட்டு வந்து டொனேட் பண்ணாங்க. நல்லவேளை நீயும் ஒரு டோனரோட வந்து சேர்த்துட்ட... தாங்க் காட்! கொஞ்சம் இருப்பா! இவரை டாக்டர்கிட்டே கூட்டிட்டு போயிட்டு வாரேன்!"

"நீ அந்த வேலைய கவனி குரு! வேற ஏதாவது ஹெல்ப் வேணுமா? பணமிருக்கு!"

"தேவைப்பட்டா வாங்கிக்கறேன்!"

குருபரன் விக்கிரமனுடன் பரபரப்பாய் ஓடினான்.

களைத்த முகத்துடன் நின்றிருந்த பைரவி மேலும் அங்கு நிற்க சங்கடப்பட்டு நகர்ந்தாள்.

"பைரவி!"

நின்றாள்.

"உங்களை... இப்படி... இங்கே பார்க்கறப்ப ஆச்சர்யமாயிருக்கு!"

"ஓ... இல்லைங்க... நான் தானம் பண்ணலாம்ங்க. நீங்க நினைக்கிற அளவுக்கு நான் எய்ட்ஸ் நோயாளி இல்லைங்க!" அவசரமாய், அதே சமயம் ஆவேசமாகவும் கூறினாள்.

கலிங்கருக்கு தன் தவறு புரிந்தது.

"ஸாரி... ஸாரி பைரவி! நான் உங்களை அந்த சூழ்நிலையில் பார்த்து, தப்பா... சரி விடுங்க! இப்பச் சொல்றேங்க... சத்தியமாச் சொல்றேன்... உங்களைப் பார்த்தா பிரமிப்பா இருக்கு. இந்த வயசுல உங்க பக்குவம்... சான்ஸே இல்லே... யாருக்கும் வராது!"

".............?!"

"எப்பேர்ப்பட்ட மனப்போராளி நீங்க! உங்களைப் பத்தி எனக்கு எல்லாமே தெரியும் பைரவி. அழகான ராகத்தோட பேரை வச்சுக்கிட்டு போராட்டத்தோடு வாழ்ந்துட்டு இருக்கீங்க. இந்த சூழ்நிலையிலேயும் அடுத்தவங்க கஷ்டத்தை எப்படி நினைச்சுப் பார்க்க முடியுது? வயசான பெண்மணிக்கு சாப்பாடு வாங்கித் தர்றீங்க? உங்க வருமானத்துல ரெண்டு பிள்ளைகளுக்கு கல்விய தர்றீங்க. இப்ப... ரத்தத்தை தானம் பண்ணிட்டு வர்றீங்க... நானும் நல்லவன்தான். லட்சம் லட்சமா சம்பாதிக்கிறேன். ஆனா, இந்தமாதிரி எண்ணமெல்லாம் எனக்கு வந்ததே இல்லை பைரவி! உங்க முன்னால மனசளவில ரொம்பச் சின்னவனாத் தெரியறேன்!" என்றவன் நெகிழ்ந்து போய் கைகூப்பி வணங்கினான்.

"சா...ர்!" பதறிப் போனாள் பைரவி.

"சார்லாம் வேணாம். கால் மீ கலிங்கர்!"

பைரவி கண்களில் மின்னல் வெட்ட அவனை ஆச்சர்யமாய் நிமிர்ந்துப் பார்த்து, சிறிதாய் புன்னகைப் பூத்தாள்.

மெல்லத் தலையாட்டி விடைபெற்று நகர்ந்தாள்.

அந்தப் புன்னகை... அவன் தலையில் ஐஸ்வாரத் திறந்து விட்டது போலிருந்தது.

○○○

"சார்... உங்களைப் பார்க்க ஒரு தாத்தா வந்திருக்கார். உங்க ப்ரெண்டோட தாத்தான்னு சொல்லச் சொன்னார்!"

கலிங்கர் தன் ஆபிஸில் ஜூனியர்களுடன் டிஸ்கஸ் செய்துக் கொண்டிருக்கையில் பணியாள் வந்து கூற சற்றே டிஸ்டர்ப் ஆனான்.

"சரி... அந்த ரூம்ல உட்கார வை!" என்று விட்டு பேச்சைத் தொடர்ந்தான்.

கண்ணாடிக் கதவு வழியே அடுத்த அறையினுள் நுழைந்த சங்கரபாண்டியனைப் பார்த்து ஆச்சர்யப்பட்டான்.

'இவரா!'

சட்டென எழுந்து வெளியில் வந்தான்.

"ஐயா வாங்க... உக்காருங்க!"

தாத்தா நடுங்கும் கரத்தில் சேரைப் பற்றி அமர்ந்தார்.

"நல்லாயிருக்கியாப்பா?"

"நல்லாருக்கேன் ஐயா... சொல்லியிருந்தா வீட்டுக்கே வந்திருப்பேனே... உங்களுக்கேன் கஷ்டம்!"

"எனக்கென்னப்பா கஷ்டம்! உன்னைத்தான் தொந்தரவு பண்ணிட்டேன் போலிருக்கு!"

"அப்படியெல்லாம் பேசாதீங்க. என்ன சாப்பிடறீங்க!"

"ஒண்ணும் வேணாம்ப்பா... உன்னால ஒரு உதவி ஆகணும்!"

"சொல்லுங்கய்யா!"

"பைரவிய உனக்குத் தெரியுமாப்பா?"

"ம்.. தெரியும்... என் தங்கைகூட படிச்சவளாம்... தங்கச்சி மூலமாதான் அவளைப் பத்திய எல்லா விஷயமும் தெரியும்!"

"பைரவி.. தங்கமானப் பொண்ணுப்பா. சின்ன வயசுல பண்ணின தப்புக்கு... அந்தப் பொண்ணை படாதபாடு படுத்திட்டாங்க.



எனக்கே இப்பத்தாம்பா தெரியும்.. பைரவி ரொம்ப ஆபத்தான வேலை செஞ்சிட்டிருக்கான்னு.. அவகிட்டே பேசக்கூட விடமாட்டேங்கிறான் அந்த படுபாவி. அதனால என் பேத்தியோட கஷ்ட நஷ்டம் எதுவும் எனக்குத் தெரியலே."

"..............!!"

"பைரவிக்காக நீ மட்டும்தான் பேசியிருக்கே! அதனாலதான் இந்த உதவியக் கேட்டு வந்திருக்கேன்."

"சொல்லுங்க... என்ன செய்யணும்?"

"அவளுக்கு வேற ஒரு நல்ல வேலை வாங்கித் தரணும். என் பேத்தி கஷ்டப்பட்டதெல்லாம் போதும். எத்தனை நாளைக்கு அவ ஒத்தை பனைமரமாட்டம் தனியா இருக்கறது? உனக்கு தெரிஞ்ச யாராவது நல்லப் பையன் இருந்தா சொல்லு. நான் பைரவிக்கிட்டே பேசறேன். அவளுக்குன்னு செய்ய நான் மட்டும்தானே இருக்கேன்? நான் இருக்கறதுக்குள்ளே அவளுக்கு ஒரு நல்லது செஞ்சி பார்த்துடணும்ப்பா! அந்த வீட்ல யாரும் மாறப் போறதில்லே. பெத்தவளால பாசத்தை வெளிப்படையா காட்ட முடியல... அவ சூழ்நிலை அப்படி. பைரவிக்கு அந்த வீட்ல பங்கு இருக்குன்னு உயில் எழுதி வச்சிருக்கேன். அவளுக்கு நீதான் தம்பி ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தரணும்!"

எண்பத்தைந்து வயது பெரியவரின் வெள்ளை மனம் கலிங்கரைக் கவர்ந்தது.

மென்மையாய் புன்னகைத்தான்.

"என்கிட்ட சொல்லிட்டீங்கள்ல? இனி பைரவி என் பொறுப்பு... சரியா?"

தாத்தாவின் கண்களில் நிம்மதி.

○○○





## 16

பைரவிக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

கலிங்கர் அவள் நம்பரை தெரிந்துகொண்டு லைனில் வந்தது மட்டுமின்றி... அவளை நேரில் சந்திக்க விரும்புவதாக கூறியது... நம்பவே முடியாத அதிசயமாக இருந்தது.

அவன் குறிப்பிட்ட... ஏற்கனவே அவளுக்கும் பழக்கமான ரெஸ்டாரெண்டிற்கு வந்தாள். சரியாய் அதே நேரம் கலிங்கரும் காரை விட்டிறங்கி உள்ளே நுழைந்தான்.

ஏற்கனவே ரூப் கார்டனில் ரிசர்வ் செய்யப்பட்டிருந்த மேஜைக்கு சென்றனர்.

தயக்கமும், கலக்கமுமாய் அவன் எதிரே அமர்ந்தாள்.

"என்ன சாப்பிடறீங்க பைரவி?"

"ஏதோ பேசணும்னு..."

"சாப்பிட்டுக்கிட்டே பேசலாமே!"

"சரி..."

"என்னப் பிடிக்கும்?"

"எதுவாயிருந்தாலும்..."

"ஏன் உங்களுக்குன்னு தனிப்பட்ட விருப்பம்னு எதுவும் இல்லையா?"

"வீட்டு சாப்பாடு பிடிக்கும். அம்மாவோட சமையல் ரொம்பப் பிடிக்கும். எப்பவும் ஓட்டல்

சாப்பாடு சாப்பிடறதால...இதுதான்னு இல்லாம... எதையும் சாப்பிடுவேன்!" இயல்பாய் பேசத் துவங்கினாள்.

பேசும்போது அவள் முகத்தில் தெரிந்த ஏக்கம், அகன்ற விழிகள், குவிந்த உதடுகள்... கலிங்கர் அவளையறியாமல், அவளை ரசித்தான்.

அவனே... உணவுகளை ஆர்டர் செய்தான்.

"பைரவி..."

"சொல்லுங்க!"

"நான் உங்கப்பா டெத்துக்குப் போயிருந்தேன் தெரியுமா?"

"நீங்களா? எப்படி? அப்பாவை உங்களுக்குத் தெரியுமா?" சாப்பிடுவதை நிறுத்தி அதிர்ச்சியுடன் கேட்டாள்.

சிரித்தான் கலிங்கர்.

"ம்... அப்பாவை விட... உங்கண்ணனைத்தான் நல்லாத் தெரியும்!"

"எ...எப்படி?"

"சீராளன் என்னோட காலேஜ்மேட்!"

"..........?!"

"நடுவில... அவன் பிஸினஸ், என் தொழில்னு வேற... வேற ரூட்ல போயிட்டிருந்ததால... சந்திக்க முடியாமப் போயிடுச்சு. ரீசண்ட்டாதான்... எதேச்சையா மீட் பண்ணிக்கிட்டோம். உங்க வீட்டுக்குக் கூட ரெண்டு மூணு முறை வந்திருந்தேன் பைரவி!"

"வீட்டுக்கா?"

"உங்களையும் பார்த்தேன்... நீங்கதான் என்னை கவனிக்கலே..."

அவமானத்தில் கண்கள் கலங்கியது.

'நான் அந்த வீட்டில் மோசமான இடத்தில் வைக்கப்பட்டிருப்பதை தெரிந்துக் கொண்டானோ?'

"இன்ஃபேக்ட்... உங்கப்பா இறந்த போது உங்களுக்கு தகவல் சொல்லச் சொல்லி சீராளன்கிட்டே எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்... கேக்கலே...!"

"நீங்களா!" கண்கள் தளும்பின.

"ஆரம்பத்தில உங்களை நானும் தப்பாதானே நினைச்சேன்? நிருபமா மூலமாதான்... உண்மைத் தெரிஞ்சது..."

"..........?!"

"தவறான அபிப்ராயத்தை ஏற்படுத்தற அந்த வேலை உங்களுக்கு அவசியமா பைரவி?"

"எ... என்ன?"

"எத்தனை ஆபத்தான வேலை? நானே உங்களைப் பார்த்திருக்கேனே? அன்னைக்கு நாலஞ்சு பேர் விரட்டிக்கிட்டு வந்தாங்க. உயிருக்கே உத்தரவாதம் இல்லையே! தவிர... கல்யாணமாகாதப் பெண்ணான உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கும் உகந்ததில்லையே பைரவி?"

முதன்முதலாய் தன்னைப் பற்றி அக்கறையாய் பேசும் ஒரு ஆத்மாவை பரிதவிப்புடன் பார்த்தாள்.

"எதிர்கால வாழ்க்கையா? எனக்கா?"

"ஏன்... அப்படியொரு எண்ணமே இல்லையா?"

"அ... அதுக்கெல்லாம் ஒரு குடுப்பினை வேணுங்க.. தகுதி வேணும்!"

"அறியாத வயசுல, பக்குவமில்லாம நடந்த விஷயங்களை மறந்துடுங்க. இப்ப என்ன தகுதி இல்லை உங்கக்கிட்டே? படிப்பு? அழகு? அடுத்தவங்களுக்கு வலிய உதவுற கேரக்டர்? தைரியம்? கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்த... ஒரு பெண்ணுக்கு இது போதாதா?"

"நம்பிக்கை வேணாமா?"

"நம்பிக்கையா?"

"ஆமாங்க... பைரவி நல்லவ... சுத்தமானவள்னு நம்பறதுக்கு ஆள் வேணுமில்லையா?"

"சரிதான்!" கலிங்கர் அவளை ஊடுருவிப் பார்த்தான்.

"ஒக்கே... உங்களை நம்பற ஆள், உங்களை தன் வீட்டு மகாராணியாக் கொண்டாடற ஆளைக் கொண்டு வந்து உங்க முன்னாடி நிறுத்தினா... கல்யாணம் பண்ணிக்கறீங்களா?"

"நா... நானா? க... கல்யாணமா?" உள்ளம் உடன்பட மறுத்தது.

"உங்க தாத்தா... அவர் கண்ணை மூடறதுக்குள்ள உங்களை கல்யாணக் கோலத்தில் பார்க்கணும்னு நேத்து ஆபீஸ்ல கண்கலங்கிட்டுப் போனார் தெரியுமா?"

"தாத்தா வந்தாரா?"

"ம்..." என்றபடி எல்லாம் சொன்னான்.

நெகிழ்ந்துப் போனாள்.

"ஆமாங்க... அந்த வீட்ல அவர் மட்டும்தான் என்மேல பாசமா இருப்பார்."

"சரி... இந்த வேலைய விட்டுருங்க. உழைச்சது போதும். இனி உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை, குழந்தைகள்னு லைபை



கலர்புல்லா அனுபவிக்கணும்."

"..........?!"

"அலையன்ஸ் பார்க்கட்டுமா?"

"..........?!"

"சொல்லுங்க! உங்க ப்ரண்டா என்னை நினைச்சுக்குங்க. இந்த நண்பன் சொன்னா கேக்க மாட்டீங்களா?"

"ம்..." தலையாட்டினாள்.

"தாங்க்ஸ் பைரவி! சீக்கிரமே மிஸ்டர் பைரவியை உங்க முன் நிறுத்தறேன்... சரியா?"

கஷ்டப்பட்டு சிரித்தாள் பைரவி.

ooo

வீடு முழுக்க பலகார வாசனை! நெய்யும் ஏலமும் மணத்தது.

"என்னம்மா... ஒரே வாசனையா இருக்கு! முறுக்கு, அதிரசமெல்லாம் சுடறீங்க போல..." என்று கேட்டான் கலிங்கர்.

"ஆமாம்ப்பா... அடுத்த வாரம் தீபாவளி வருதில்லே?"

"இதையே சாக்கா வச்சு சாப்பிட ஆரம்பிச்சிடாதேம்மா. சுகரும், பிபியும் எகிறும்... ஜாக்கிரதை!"

"பலகாரமும், பட்டாசும் இல்லாம ஏது தீபாவளி? அதுவுமில்லாம சித்தியும், நிருபமாவும் இந்த வருஷம் நம்மளோட இருக்காங்க... ஹூம்... உனக்கு கல்யாணமாகியிருந்தா... என் மருமகளோடயும் சேர்ந்துக் கொண்டாடியிருப்பேன்... நீதான் மனசு வைக்க மாட்டேங்கிறே!" தாட்சாயணி அலுத்துக் கொண்டாள்.

கலிங்கர் அம்மாவின் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டான்.

"சரிம்மா... உனக்காகவாவது... நான் யாராவது ஒருத்திய லவ் பண்ணலாம்னு இருக்கேன். பரவாயில்லையாம்மா?"

"என்னப்பா... போட்டு வாங்கறியா?" மகனை குறுகுறுவெனப் பார்த்தாள்.

"இப்பதாம்மா... அந்த யோசனை ஓடுது. சொல்லு... எப்படிப்பட்ட பொண்ணை நான் காதலிக்கட்டும்!"

"இப்படியாவது இறங்கி வர்றியே.. அதுவே போதும்ப்பா! உன் மனசுக்கு பிடிச்சப் பொண்ணா இருந்தா அதுவேப் போதும்!"

"அவ ஏழையா, எப்படியிருந்தாலும் பரவாயில்லையா?"

"என்னைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டே இந்த கேள்விய கேக்கலாமா?"

"சரிம்மா... தீபாவளி அன்னைக்கு உன் மருமகளா வரப்போறவளை கூட்டிட்டு வர்றேன்... சரியா?"

தாட்சாயணி நம்ப முடியாமல் பார்த்தாள்.

"உண்மையாவா சொல்றே? யாருப்பா அந்தப் பொண்ணு?"

"சஸ்பென்ஸ்! ஆனா... உங்க தீபாவளி பலகாரத்துல இன்னொரு அயிட்டமும் சேர்த்துக்குங்க!"

"என்ன அது?"

"பூரி மசாலா!"

ooo



பைரவி இப்படியொரு துன்பத்தை இதற்கு முன் அனுபவித்ததேயில்லை.

கலிங்கர் கொடுத்ததாய் சொல்லி ஒரு நபர் அவளிடம் ஒரு கவரைக் கொடுத்துவிட்டுச் சென்றான். மறுவிநாடியே கலிங்கரிடமிருந்து போன்.

"பைரவி... கவர் கிடைச்சதா?"

"ம்... இப்பதான் குடுத்துட்டுப் போனாங்க. என்ன கவர் இது?"

"உங்களுக்காக நான் பார்த்திருக்கிற அலையன்ஸ். இதிலே ஒண்ணை நீங்க செலக்ட் பண்ணி... எனக்கு போன் பண்ணுங்க... ஓக்கே?"

கவர் கனமாய் இருந்தது.

மனதிற்குள் சூடு பரவியது.

'இதில் இருக்கிற யாரோ ஒருவருடன் நான் வாழ்க்கையைத் தொடங்க முடியுமா? எப்படி சாத்தியம்?'

'உள்ளம் சந்தோஷத்தால் பொங்கும் போதெல்லாம் எட்டிப் பார்க்கும் ஆசைமுகம் கலிங்கரோடதல்லவா? ஆனால், அந்தமுகம் அவளுக்கு சொந்தமாகக் கூடிய தகுதியோ, அந்தஸ்தோ அவளுக்கில்லையே! ஆனாலும், வேறு முகத்தில் காலம் முழுக்க விழிக்கும் தைரியமும் வரவில்லையே!

குழப்பத்திலும், வேதனையிலும் பயத்திலுமாய் பொழுது கழிந்ததேயொழிய... அந்த கவரை கிழித்துப் பார்க்க தைரியம் மட்டும் வரவேயில்லை.

கலிங்கர் அவளின் உற்சாகக் குரலுக்காக இரவு வரை காத்திருந்தான்.

'என்னாச்சு? ஏன் அவன் போன் பண்ணவில்லை? காலையிலேயே எதிர்பார்த்தேனே? ஒருவேளை பிடிக்கவில்லையோ?'

நினைத்து... நினைத்து அவன் உறக்கம் பறிபோயிற்று.

ஊரெங்கும் பட்பட் படார் என பட்டாசு வெடிக்கும் சப்தம்.

காலையில் எழுந்ததும் அம்மா தலையில் எண்ணெய் வைத்து விட்டாள்.

"இன்னைக்கு என் மருமகளை கண்ல காட்டறேன்னு சொன்னியே கலிங்கர்!"

"ஆமாம்மா... சொன்னேன்!"

"என்னப்பா ஒரு மாதிரிப் பேசறே?"

"நீயா கற்பனை பண்ணிக்காதே! வேற வேலை இருக்கு... சந்தர்ப்பம் அமைஞ்சா கூட்டிட்டு வர்றேன்" என்றவனை அதற்கு மேல் வற்புறுத்தும் எண்ணமின்றி அகன்றாள்.

○○○

கார் சீராளன் வீட்டின் முன் வந்து நின்றது.

சப்தம் கேட்டு வெளியில் வந்த சீராளன் முகம் மலர்ந்தான்.

"வா... கலிங்கர்! தீபாவளியும் அதுவுமா இங்கே? எங்களுக்குத்தான் இந்த வருஷம் தீபாவளி இல்லையே... எனிவே, உனக்கு என்னுடைய தீபாவளி வாழ்த்துகள்!"

"தாங்க்ஸ்.."

"உக்கார்..."

"இல்லப்பா... டைம் இல்லே... நான் பைரவிய பார்க்க வந்தேன்!"

"பைரவியா?" என்று அவன் வாயைத் திறந்து மூடுவதற்குள் கலிங்கர், பைரவியின் அறை வாயிலில் நின்றான்.

கதவைத் தட்டினான்.

திறந்த கதவின் பின்னே தெரிந்த முகம், அழுதழுது முகம் உப்பலாய் இருந்தது.

திடுக்கிற்றான்.

"வாங்க..." என்றாள் ஆச்சர்யமாய்.

"என்னாச்சு பைரவி... போன் வரும்னு எதிர்பார்த்தேன்!"

"ஓ... அதுவா? உக்காருங்க!"

கலிங்கர் அப்போதுதான் கவனித்தான்... கவர் பிரிக்கப்படாமலேயே இருப்பதை!

"போட்டோஸ் பார்த்துட்டீங்களா?"

"இ... இல்லே... இ... இப்ப.. பார்த்துடறேன்!"

"சரி... எடுத்துப் பிரியுங்க!"

கைகள் நடுங்க எடுத்தவளை ரசித்தான்.

சில்வர் நிற சல்வாரில் கறுப்பு நிற ஷாலை இருபுறமும் இணைத்து வலப்பக்க இடுப்பில் முடிச்சுப் போட்டிருந்தது... நடன மங்கையைப் போல் இருந்தது. கூந்தலை விரித்து விட்டிருந்தது... மயில் தோகையை விரித்திருப்பது போலிருந்தது.

கவரைக் கிழித்து போட்டோக்களை எடுத்தவள்... நடுக்கத்தில் வழுக்கிக் கொண்டு கீழே விழ... போட்டோக்கள் சிதறின.

## வேண்டும் பசுமை!

உலகம் வெப்பமயமாகி வருகிறது. அதிகரித்து வரும் வெப்பத்தைத் தடுக்க உலக நாடுகள் அனைத்தும் மரங்களை வளர்க்கும் திட்டத்தை ஊக்கப்படுத்தி வருகின்றன.

பெருகி வரும் புகை மண்டலத்தை



கட்டுப்படுத்த எல்லா நாடுகளும் மரங்களை வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பாரீசில் 15,000 மக்கள் ஒன்று கூடி மரம் போலவே நின்று இந்த புகைப்படத்தை எடுத்துள்ளனர்.

இது யுனஸ்கோ நிறுவனம் மூலம் அனைத்து நாட்டு தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படுகிறது. மரம் வளர்க்க இப்படியொரு புதிய யுக்தி வரவேற்கத்தக்கதே.

-பாரீஸ் பார்த்தசாரதி.



பதறிப்போய் பொறுக்க முனைந்தவள்... விழிகள் தெறித்து விழும்போல் பார்த்தாள்.

சடாரென கலிங்கரை நிமிர்ந்துப் பார்த்தாள்.

அவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நம்ப முடியாமல் மறுபடி போட்டோக்களைப் பார்த்தாள். அத்தனையும் கலிங்கரின்... விதவிதமான போட்டோக்கள்.

'அப்படியானால்... அப்படியானால்?!'

"என்ன பைரவி... உனக்கு ஒரு போட்டோக்கூடவா பிடிக்கவில்லை! அவ்வளவு மோசமாகவா இருக்கிறது? வேற போட்டோ எடுத்துத் தரவா?"

பைரவி நம்பாமல் அவனையேப் பார்த்தாள்.

"பிடிக்கலையா?"

"நீங்க ஒண்ணும் விளையாடலியே!"

"காதல்ல போய் விளையாடுவேனா?"

"நா... நான்... உங்களுக்கு... எ... எப்படி?"

"நோ... பேசி நேரத்தை வீணாக்காதே... கிளம்பு... என் வீட்ல உனக்கொரு இன்ப அதிர்ச்சி காத்திருக்கு!"

"எ... என்ன?"

"சஸ்பென்ஸ்... ம்... கிளம்பு!" என்று கைப்பற்றினான்.

அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

சிலிர்த்துப் போயிருந்தாள் பைரவி!

சீராளன் அந்தக் காட்சியை பார்த்து விட்டு முகம் சுருக்கினான்.

"என்ன கலிங்கர் இது? அந்த நாய்கிட்ட உனக்கென்ன பேச்சு?"

"மச்சான்... இது வேற லவ்வு!" என்றபடி காரில் அமர வைத்தான்.

சீராளன் முகத்தில் ஈயாடவில்லை.

தாத்தாவும், ஜெயலட்சுமியும் ஆனந்தக்கண்ணீருடன் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

காரில் அமர்ந்த பின்பும் கலிங்கர் அவள் கையை விடவில்லை.

அவன் வீட்டை நோக்கி கார் பறந்தது.

மாமியார் மருமகளுக்காக காத்திருப்பதை அறியாமல் பயத்துடன் இருந்தாள் பைரவி.

வீட்டில் அவள் சந்தோஷத்தில் நெகிழ்ந்து முகத்தை புதைத்துக் கொள்ளத் தயாராக... கலிங்கர் நெஞ்சை காதலுடன் விரித்து வைத்திருந்தான்.

பைரவிக்கு புது அத்தியாயம் துவங்கி விட்டது.

(முற்றும்)

## கின்னஸில் பட்டாசு

நவீன பட்டாசுக்கலையின் தந்தை என்று போற்றப்படும் சார்லஸ் தாமஸ் பிராக், 1879ல் லண்டன் கிறிஸ்டன் அரண்மனையின் அருகே 35 ஆயிரம் சிறிய வண்ண ஒளிக்குச்சிகள் மூலம் பிரம்மாண்டமான பட்டாசு வெடிக் கொண்டாட்டத்தை நடத்திக் காட்டினார். 80 ஆயிரம் மக்கள் அதைப் பார்த்து ரசித்தனர். இது ஒரு கின்னஸ் சாதனை.

இங்கிலாந்து நாட்டில் பிளைமவுத் பல்கலைக்கழக பேராசிரியரான ராய்லாரி, ஆகஸ்டு 20, 2006ல் 55 ஆயிரம் ராக்கெட் பட்டாசுகளை இணைத்து ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்தார். இதுவும் ஒரு கின்னஸ் சாதனைதான்.

இதற்கு முந்தைய கின்னஸ் சாதனை 1997ல் சானெல் தீவிலுள்ள ஜெர்சியில் டெரி மெக்டொனால்டு என்பவர் ஒரே நேரத்தில் 39



ஆயிரத்து 210 ராக்கெட் பட்டாசுகளை வெடிக்கச் செய்ததுதான். 40 ஆயிரம் ராக்கெட்டுகளை வெடிக்கச் செய்ய அவர் திட்டமிட்டு இருந்தார். அவற்றில் 790 ராக்கெட்டுகள் வெடிக்காமல் போய்விட்டது. இந்த சாதனையை முறியடிப்பதற்காகத்தான் ராய்லாரி 55 ஆயிரம் ராக்கெட்டுகளை வெடிக்கச் செய்தார். இந்த பட்டாசு வெடித்தபோது பிளைமவுத் நகரமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. லட்சக்கணக்கானவர்கள் கண்டு களித்தனர்.

- வத்சலா சதாசிவன், சென்னை.